# எச்சரிக்கை! மறைவான பாறைகள் முன்னால் உள்ளன! (4:32-5:14)

*யூதா தமது நிருபத்தில், கள்ள போதகர்களைச் சுட்டிக் காட்ட, வண்ணமிகு அநேக உவமானங்களைப் பயன்படுத்தி னார். அவைகளில் ஒன்று பல ஆண்டுகளுக்கு முன்பு என் கவனத்தை ஈர்த்தது: "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில்[1] மறைவான பாறைகளாயிருந்து (தமிழில்: கறைகளாயிருந்து)" (வ. 12;* ASV*). "அன்பின் விருந்துகளில்" என்ற சொற்றொடர் ஆதி கிறிஸ்தவர்கள்[2] மகிழ்ச்சியுடன் அனுபவித்த ஐக்கிய விருந்துகள் என்பதை நான் அறிந்தேன், மற்றும் "மறைவான பாறைகள்" என்பது உணவில் உள்ள க   ற்கள் என்று எண்ண மிடுகின்றேன். ஒரு கோப்பை மொச்சைப் பயிற்றில்[3] சில கற்கள் இருப்பதைக் கண்ணுற்றுள்ளதாலும், உணவின் எலும்புத் துண்டுகளிடையில் சில கற்கள் இருப்பதைக் கண்ணுற்றதாலும், இவ்விளக்கம் வழக்கத்தைக் காட்டிலும் பொருத்தமானதென்று எண்ணினேன். உணவின் நற்பண்புகளை, வழக்கத்திற்கு மாறான சில பொருட்கள் கெடுக்கக் கூடும்-கள்ள போதகர் களும் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள ஐக்கியத்தை அழிக்கக் கூடும்!*

*"மறைவான பாறைகள்" என்பதைப்பற்றிய எனது விளக்கம் தெளிவாயிருப்பினும் - தவறானதாகும். நிலத்தால் சூழப்பட்ட ஒக்லஹாமா மாகாணத்தில் நான் வளர்க்கப்பட்டிராவிட்டால், இதன் பொருளானது இன்னும், தெளிவாய் இருந்திருக்கும். நிறைவாக நான், "மறைவான பாறைகள்" என்பவை கடலுக் கடியில் மறைந்துள்ள பாறைகள் என்றும், கப்பற் பயணத்தில் கடுமையான ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்றும் கற்றறிந்தேன்.* NASB*யில் "மறைவான சிதைவுப் பாறை" என்ற*

*வார்த்தைகள் பயன்பட்டுள்ளன. பவுலின் ரோமாபுரிப் பயணத்தில் "மறைவான பாறைகள்" அவர் பயணம் செய்த கப்பலைச் சேதப்படுத்திற்று (27:41). நூற்றாண்டுகளாக, பல கப்பல்கள் மறைவான பாறைகளில்[4] மோதி மூழ்கியுள்ளன.*

*அப். 4ன் முடிவுப் பகுதி மற்றும் அப். 5ன் தொடக்கப் பகுதி இவற்றை நான் படிக்கையில், யூதா 12ன் உருவகம் எனது மனதில் வந்தது. அதிகாரங்கள் 1 முதல் 3 முடிய, சபையானது தெளிவான ஒரு பயணத்தைச்[5] சந்தோஷமாய் அனுபவித்தது. அதிகாரம் 4ல் உபத்திரவத்தின் முதல் புயல் வீசிற்று, ஆனால் சகோதரர்கள் அந்தப் புயலைத் தாங்கிக் கொண்டனர். ஆயினும், அதிகாரம் 5ல் மறைவான பாறையொன்று - சபையை அழிக்கக்கூடிய அளவு மறைவான பாறையொன்று - இருந்தது!*

## *தெளிவான வானம் (4:32-37)*

*திடீரென்று எழுந்த தடைக்குப்பின், ஒரு சில காலம் வரையில், சபையானது தெளிவான வானம் மற்றும் சாதகமான காற்று என்ற சூழ்நிலைகளினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. 2:43-47ல் தொடங்கிய அன்பு, ஆர்வம் மற்றும் விடுதலையுணர் வின் வரலாற்றை லூக்கா, நடபடிகளின் 4:32-37லும் தொடர்ந் தார். சிலுவையின் நிழலில், இயேசு, அப்போஸ்தலர்களின் உபதேசத்தினால் தம்மை விசுவாசிக்கும் யாவரும் ஒன்றா யிருக்கும்படி ஜெபித்தார் (யோவா. 17:20, 21). சபையின் ஆதி நாட்களில்[6] இந்த ஜெபத்திற்குப் பதில் கிடைத்தது: "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள்"[7] (வ. 32அ). "கூட்டத் தார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "திரளான கூட்டத்தார்"[8] என்ற நேரடிப் பொருளைத் தருகிறது. அவர்கள் அநேகராய்க் காணப்பட்டிருந்தாலும், உண்மையில் அவர்கள் ஒன்றாயிருந்தனர். கிறிஸ்துவுக்குள்ளான பொதுவான பிணைப் பினால் அவர்கள் ஒன்றாயிருந்தனர்!*

*அவர்களின் ஐக்கியமானது, சுயாதீனமுள்ள தியாகத்தை விளைவித்தது:*

> *... ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்*

களுக்குப் பொதுவாயிருந்தது ... நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப்[9] பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (வ. 32ஆ-35).

இஸ்ரவேலர்களுக்குத் தேவன், ''எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படி'' என்ற வாக்குத்தத்தம் செய்திருந்தார், ஆனால் இது, "நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யும்படி" என்ற நிபந்தனையுடன் இருந்தது (உபா. 15:4, 5). இஸ்ரவேலர்கள் இந்த நிபந்தனையை நிறைவேற்றத் தவறினார்கள், எனவே மக்கள் அந்த வாக்குத்தத்தைப் பெறத் தவறினார்கள். கடைசியாக, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய, தேவனுடைய மக்கள் அவரது சித்தத்தைச் செய்யத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். இவ்விதமாக, "அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்த தில்லை"[10] என்ற வியப்பூட்டும் வார்த்தைகளை நாம் வாசிக்கின்றோம். எண்ணற்ற சமூகங்களில் இந்த முழு நிறைவான கொள்கையே பல ஆண்டுகளாக அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது. ஏழ்மை உள்ள இடத்தில், இவ்வுலகம் எவ்வித மாறுபாடின்றி, "இன்னும் அதிகமான அரசுத் திட்டங்கள் நமக்குத் தேவை" என்று கூறுகின்றது. லூக்கா, ''நமக்கு இன்னும் அதிகமாகக் கிறிஸ்துவின் ஆவி தேவை" என்று கூறியுள்ளார்.

"ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை'' என்பதால் இச்சூழ்நிலை சாத்தியமாயிற்று. ஒரு குழந்தை பிறந்தவுடன் கற்றுக்கொள்கிற வார்த்தைகளில் ஒன்று ''என்னுடையது''[11] என்பதாகும்; இவர்கள் மறுபடி பிறந்ததும் மறந்துபோன முதல் சில வார்த்தைகளில் "என்னுடையது" என்பதும் ஒன்றாகும். அவர்களுக்குள்ளவைகளை அவர்கள் "நம்முடையது" - அவர்களுக்கும் அவர்களின் சகோதரர்களுக்கும் பொதுவாய்ப் பயன்படுவது - என்று எண்ணினார்கள். ஆயினும், அவர்கள் தங்கள் உடைமைகளை ''அவருடையது'' என்று எண்ணியது மிகவும் முக்கியமானதாகும்: அவர்களுடையதெல்லாம் தேவனுடையது (2:44,

*45க்கான குறிப்புகளைப் படிக்கவும்) என்றும் அவர்கள் வெறுமனே உக்கிராணக்காரர்களே என்றும் அவர்கள் உணர்ந்தார்கள். அவர்களுடையதில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும், தேவன் தமது பிள்ளைகளுக்குப் போஷிக்கும்படி விரும்பினால் அது அவர்களுக்குச் சிறந்ததாகவே இருந்தது.*

*இது, எல்லாக் கிறிஸ்தவர்களும் உடனடியாகத் தங்கள் உடைமைகள் யாவற்றையும் விற்று, கிடைத்த பணத்தை ஒரு பொதுவான நிதியில்[12] சேர்த்துவிட்டனர் என்று பொருள் படாது. மாறாக, தனிநபர்கள், தங்கள் சகோதர சகோதரிகளின் தேவைக்குத்தக்கதாகத் தங்களிடத்தில் இருந்தவைகளை விற்றனர் என்றே பொருள்படும். NIVயில், "நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவ்வப்போது அவைகளை விற்றனர்" என்று உள்ளது. சரியான நடைமுறை[13] என்னவாயிருந்தது என்று நாம் அறியவில்லை. ஒருவேளை, நிதிக் குறைவு ஏற்பட்டபோது, அது தேவையென்று அறிவிக்கப் பட்டு, முடிந்தவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு வந்திருக்கலாம். அல்லது, ஒருவேளை, அவர்களின் கூட்டங் களில் குறிப்பிட்ட தேவைகள் அறிவிக்கப்பட்டிருக்கலாம். பிறகு, அங்கு இருந்தவர்கள், "இப்போதைக்கு இது போதும்"![14] என்று பொறுப்பாளர்கள் கூறும்வரைத் தங்கள் உடைமைகளைத் தாமாகவே கொண்டு வந்து சேர்த்திருக்கலாம்.*

*நடைமுறை எதுவாக இருந்திருப்பினும், "அவர்கள் [தங்கள் உடைமைகளை] விற்று, அதின் கிரயத்தை அப்போஸ்தலர் களின் பாதங்களில் சேர்ப்பித்தனர்."[15] முதலில், அப்போஸ்தலர் களே தேவையுள்ளவர்களுக்கு பிரித்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தனர். (பின்னாளில் இப்பணி ஒரு சுமையானபோது, 6:1-4ல் காணும்வண்ணம் அவர்கள் மற்றவர்களின் உதவியை நாடினர்.)*

*கிறிஸ்தவர்கள் இதை அப்போஸ்தலரின் கட்டளையாகச் செய்யாமல் (5:4), ஒருவர்மேலொருவர் கொண்ட அன்பி னாலும், அக்கறையினாலும் செய்தனர்! அவர்களின் தாராள குணம் தானாகவே எழுந்தது. கர்த்தருடைய சபையில் இவ்வித நடக்கையிருப்பதைக் காணும் சிலாக்கியம் உங்களுக்கு வாய்த்திருக்கிறதா என்று நான் அறியவில்லை. ஆனால் எனக்கு வாய்த்திருக்கிறது. "பிறர் நலம் பேணும்" டெக்ஸாஸ் மாநிலத்தி*

லேயே நான் எப்பொழுதும் வாழ்ந்திருக்கிறேன், இங்கு ஒவ்வொருவருமே மற்றவர்களின் நலம் குறித்து அக்கறையுட னிருப்பதால், உள்ளூர் சபைகளின் உபகாரங்களான[16] இரக்கமுள்ள பண்புகள் என்று தனியாக எதையும் கண்டிருக்க வில்லை. ஆயினும் சபை உறுப்பினர்கள் சந்தோஷத்துடன் தங்கள் சம்பத்துகளை விற்று உள்ளூர் சபையில் உள்ளவர் களுக்கு உதவி செய்யவும் - விசேஷமாக, மரிக்கும் நிலையில் உள்ள உலகத்திற்கு நற்செய்தியை அனுப்பவும் - சந்தோஷமாய் உதவும் சபை உறுப்பினர்களை நான் கண்டிருக்கிறேன்!

பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய இவ்விபரம் வசனம் 33ல் ஆழமாய் உள்ளது: "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழு தலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது." முதல் பார்வையில், இவ்வசனத்தில் ஒன்றும் இல்லாதது போலக் காணப்படுகிறது; இது 31ம் வசனத்திற்குப் பின் வரத் தகுதியானது போலத் தோன்றுகிறது. ஆயினும், சபையாரால் காட்டப்பட்ட அன்பு மற்றும் தாராள குணம் இவற்றின் விளைவாக இது உண்டாயிற்று என்பதால் இவ்விடத் தில் இவ்வசனம் தகுதியாகக் கூறப்பட்டுள்ளதென்பது இரண்டாம் முறை சிந்தித்துப் பார்க்கையில் விளங்குகின்றது. "கிருபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை அநேகமாக 2:47ல் உள்ளது போலவே மக்களிடம் உள்ள தயவை[17] குறிப்பதாய் உள்ளது. NEBயில் "அவர்கள் உயர்ந்த மதிப்பில் வைக்கப்பட்டனர்" என்றுள்ளது. கிறிஸ்தவர்கள், தங்களுடையவர்கள்மேல் கொண்ட அக்கறையைக் கண்ட, கிறிஸ்தவரல்லாதவர்கள், அப்போஸ்தலர்களின் செய்தி யின்பால் அதிக கவனத்தைக் காண்பிக்கத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். கிறிஸ்துவைப் போன்றுள்ள கிறிஸ்தவர்களைக் காட்டிலும் நற்செய்தி ஊழியத்திற்கு உதவியாயிருப்பது வேறு ஒன்றும் இல்லை; அவரைப்போல் இல்லாத கிறிஸ்தவர்களைக் காட்டிலும் நற்செய்தி ஊழியத்தைப் பாதிப்பது வேறு எதுவும் இல்லை!

கிறிஸ்தவர்களின் தாராள குணத்தைப்பற்றிப் பொதுவாகக் கூறிய பிறகு, லூக்கா ஒரு குறிப்பிட்ட எடுத்துக்காட்டைத் தந்தார்:

*சீப்புருத் தீவானும்[18] லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங் கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்[19] பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதன் கிரயத்தைக்[20] கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே[21] வைத்தான் (வ. 36, 37).*

இது நமக்கு நடபடிகள் நூலின் முக்கியமான ‘‘சிறு பாத்திரமாகிய’’ பர்னபாவைப்பற்றிய முன்னுரையாகும். நடபடிகள் நூலில் குறைந்தது இருபத்தைந்து முறைகளும், நிருபங்களில் மேலும் ஐந்து முறைகளும் பர்னபாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

“பர்னபா” என்ற பெயரின் பொருளை, லூக்கா, தமது புறஜாதி வாசகர்களுக்கு விளக்கினார். “பர்” என்பது “இன்னாரின் மகன்”[22] எனப் பொருள்படும். “பர்னபா” என்றால் “ஊக்கமூட்டுதலின் மகன்”[23] (அல்லது “ஆறுதலின் மகன்” [KJV] அல்லது “இன்ப நல மூட்டுதலின் மகன்”[24] அல்லது “நற்செயலுக்குத் தூண்டுதலின் மகன்”[25]) என்று பொருள்படும். யோசே என்பவர் நடைமுறைப் பிரசங்கத்தில் தனிச் சிறப்புப் பெற்றவராயிருந்ததால் ஒருவேளை பர்னபா என்று அழைக்கப்பட்டிருக்கலாம், அவர் சபை எப்படி இருக்க வேண்டும் என்ற நற்செயலுக்குத் தூண்டுபவராயிருந்தார். அவர் இப்படிப்பட்ட பிரசங்கம் செய்ததன் எடுத்துக்காட்டு ஒன்றை நாம் பெற்றுள்ளோம் (11:23, 24). அநேக நேரத்தில் இவரை தனி நபர்களை ஊக்கமூட்டிப் பெலப்படுத்துகிறவராகவே நாம் காண்கின்றோம். இவர் எப்போதும் மக்களை உற்சாகமூட்டி எழுப்பிக்கொண்டிருந்தபடியினால், அப்போஸ்தலர்கள் இவருக்குப் பர்னபா என்று பெயரிட்டனர் என்று நான் எண்ணுகின்றேன். அவர் எதற்காக அப்படிப் பெயரிடப் பட்டிருந்தாலும், இன்றைய சபையில் அதிகமான “ஊக்கமூட்டும் மகன்கள்” தேவைப்படுகின்றனர்!

பெருந்தன்மைக்கான இந்தக் குறிப்பிட்ட எடுத்துக் காட்டை லூக்கா ஏன் தேர்ந்துகொண்டார்? ஒருவேளை, நடபடிகள் நூலில் பிரதானமாய்க் காணப்படுகின்ற இம்மனிதரை அறிமுகப்படுத்த மட்டும் இதை ஒரு வாய்ப்பாகப்

பயன்படுத்திக் கொண்டாரா? வேறு வகையில் பார்ப்ப தென்றால், ஒருவேளை பர்னபா அளித்த கொடை இதை தனிச் சிறப்புள்ளதாக்கிற்றா? அவர் ஒரு லேவியர் என்பதை லூக்கா ஒரு கருத்தாகக் கூறியுள்ளார். பலஸ்தீன நாட்டில் ஆதியிலே நிலங்கள் பகிரப்பட்ட போது, மேய்ச்சல் நிலங்கள் தவிர வேறு எந்தப் பங்கையும் லேவியர்கள் பெறவில்லை (ஆலயத் திலிருந்தே அவர்களின் போஷிப்பு பெறப்பட வேண்டியதாய் இருந்தது, எண். 18:20, 21, 24; 35:1-8; யோசு. 21:41). லேவியராக இருந்த பர்னபா, ஒருவேளை அவருக்கென்று நிலத்தைப் பெற[26] மிகுந்த கஷ்டப்பட்டிருக்க வேண்டும் - அதை விற்பதும் அவருக்கு அதிக மனக்கஷ்டத்தைக் கொடுத்திருக்க வேண்டும். பர்னபாவைப்பற்றி விசேஷமாக இங்கு லூக்கா குறிப்பிடக் காரணம் எதுவாக இருப்பினும், அவரது அன்பின் கொடையானது, அதற்குப்பின் வருகின்ற[27] ஒன்றிலிருந்து முற்றிலும் முரண்பட்டிருந்தது.

## மறைவான பாறைகள் (5:1-11)

சபை ஒருமைப்பாட்டுடனிருந்து, பாராட்டப் பெற்று, வளர்ந்துகொண்டிருந்தது. சாத்தானால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாதிருந்தது! அதைப் பிரித்து, கனவீனப்படுத்தி, குறைக்க அவன் விரும்பினான்! (இச்சொற்றொடர் வாரன் W. வயர்ஸ் விளக்கத்திலிருந்து தழுவப்பட்டது.) அவன் வெளியிலிருந்து வரும் உபத்திரவத்தின்மூலம் சபையை அழிக்க முயற்சி செய்தான். இப்பொழுதோ உள்ளிருந்து வரும் பாசாங்கின் மூலம் அதை அவன் அழிக்க முயற்சி செய்தான்.

> அனனியா என்னும் பேருள்ள ஒருவனும்,[28] அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை[29] விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (வ. 1, 2).

சபையின் முதல் பாவமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது அனனியா சப்பீராளின் பாவமாகும். இது முதல் பாவமல்ல-

*எல்லாரும் பாவம் செய்கின்றனர் (ரோமர் 3:23) - ஆனால் இது முதலாவது பதிவு செய்யப்பட்டதாகும்.*

*அம்மனிதரின் பெயரான அனனியா என்பதற்கு "யேகோவா கிருபையுள்ளவர்" என்று பொருள். தேவனுடைய கிருபையைப் பற்றி அவர் போதிக்கப்பட்டிருந்தார்; விரைவில் அவர் தேவனுடைய நீதியையும் கற்றுக் கொள்பவராயிருந்தார். அவரது மனைவியின் பெயராகிய சப்பீராள் என்பது அரமாயிக் மொழியில் "அழகு" என்று பொருள்படும். அவள் அழகிய முகமுடையவளாயிருந்திருக்கலாம், ஆனால் அழகிய ஆன்மா உடையவளாய் அவள் இருந்திருக்கவில்லை.*

*அவர்களின் பாவத்தைப் புரிந்துகொள்வது முக்கியமானதாயுள்ளது. ஒரு உடைமையை வைத்திருந்ததோ அல்லது அந்த உடைமையை விற்றதோ (அல்லது அவர்களால் முடிந்திருந்தால் அதை ஒரு இலாபத்திற்காக விற்றதோ) அவர்களின் பாவமாக இருக்கவில்லை. விற்ற கிரயத்தில் ஒரு பங்கை அவர்கள் தங்களுக்கென்று வைத்துக்கொண்டதுகூடப் பாவமல்ல. வசனம் 4 இதைத் தெளிவு படுத்துகின்றது. மாறாக, விற்ற கிரயத்தில் ஒரு பங்கை மட்டும் கொண்டு வந்து, அதுதான் முழு விற்கிரயம் என்று கூறியதுதான் அவர்களின் பாவமாயிருந்தது (வ. 3, 8).*

*மேடையில் தோன்றும் நடிகனுக்கு[30] "மாய்மாலக்காரன்" என்ற வார்த்தை கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது. அந்நாட்களில் நடிகர்கள் முக மூடியணிந்தனர்: சிரிக்கும் முகமூடிகள் இன்பவியலுக்கும், துக்க முகமூடிகள் துன்பவியலுக்கும் பயன்படுத்தப்பட்டன. காலம் செல்லச் செல்ல, "மாய்மாலக்காரன்" என்ற வார்த்தை, இல்லாத ஒன்றை இருப்பது போல் பாவனை செய்பவனையும், உண்மை இயல்பை "முகமூடி" யால் மறைப்பவனையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (மாய்மாலக்காரர்களைப்பற்றிக் கர்த்தர் என்ன நினைக்கிறார் என்பது மத். 23ல் கூறப்பட்டுள்ளது).*

*தாம் எப்படியிருக்க வேண்டும் என்பதிலிருந்து ஒருவர் தவறுவது மட்டும் மாய்மாலமாகி விடாது; நம்மில் யாரும் நாம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பதில்லை. மாய்மாலம் என்பது துணிகரமான வஞ்சனையாகும். அனனியாவும் சப்பீராளும் தங்கள் வஞ்சனையைத் திட்டமிட்டனர். அந்தத்*

திட்டத்தில் அவர்கள் "ஒருமனப்பட்டனர்" (வ. 9). மாய்மாலம் என்பது மனப்பூர்வமான பாவமாகும் (எபி. 10:26-29).

வஞ்சிக்கும்படியான அவர்களின் தீர்மானத்தைத் தூண்டியது எது என்பதுபற்றி லூக்கா ஒன்றும் கூறவில்லை, ஆனால் நாம் ஒரு கற்றறிந்த யூகம் செய்ய முடியும்.[31] பர்னபா தனது கொடையினால் ஒரு விசேஷ அங்கிகரிப்பைப் பெற்றிருந்தார் (அவர் அளித்த கொடையினால் கூட ''பர்னபா'' என்ற இடுபெயர் அவருக்கு ஏற்பட்டிருந்திருக்கலாம்). அனனியாவும், சப்பீராளும் இதே பெரும்புகழ்ச்சியை தங்களுக்கும் பெற்றுக்கொள்ள விரும்பியிருப்பார்கள். சர் ரிச்சர்ட் ஸ்டீலி அவர்கள், "மனதில் உண்டாகும் எல்லா வியாதிகளிலும் பயங்கரமானது அல்லது பேரழிவை ஏற்படுத்துவது தற்புகழ்ச்சியை விரும்புவதாகும்" என்று குறிப்பிட்டார்.

அவ்விருவரும் நிலத்தை விற்க முடிவு செய்தபோது, அவர்களின் புகழ்ச்சி ஆசை அவர்களின் பண ஆசையோடு (1 தீமோ. 6:10) வலுவாய் மோதிற்று. அந்த நிலம் நல்ல விலைக்கு விற்கப்பட்டிருக்க வேண்டும், அவர்களின் பேராசை அதன் முழுக் கிரயத்தையும் காணிக்கையாகக் கொடுத்துவிடும்படிக்கு அவர்களை அனுமதிக்கவில்லை. பின்வரும் கேள்வியை அவர்கள் ஆழ்ந்து சிந்தித்தனர்: பர்னபாவைப் போன்று தியாகம் செய்யாமல், பர்னபாவைப் போன்று புகழ்ச்சி பெறுவது எப்படி? நிலத்தின் கிரயத்தைப்பற்றிப் பொய் சொல்லுதல் என்பதே அவர்களுக்கு விடையாயிற்று. ஆலிவர் வென்டெல் ஹோல்ம்ஸ் அவர்கள் ஒருமுறை, "பாவத்திற்கு அநேக கருவிகள் உண்டு, ஆனால் ஒரு பொய் என்பது அக்கருவிகள் யாவற்றுக்கும் பொருந்துகின்ற ஒரு கைப்பிடியாகும்" என்று கூறினார் என்று வயர்ஸ்ப் விளக்கவுரையளிக்கிறார்.

இவ்விதமாக அனனியா தனது பணம் பெருத்த பையுடன்[32] அன்று காலையில் ஆரம்பித்தான் (இன்னொரு நாணயக் குவியல் அவன் வீட்டில் இருப்பது யாருக்கும் தெரியாது!). அவன் சென்று நாணயங்களைக் கொட்டும்போது எழும் அங்கிகரிப்பின் சிறு சத்தங்களைக் கற்பனை செய்கையில் அவனுக்குள் புன்னகை பொங்கிற்று. அவர்கள் அவனுக்கு ஒருவேளை "தியாகத்தின் மகன்" என்றோ அல்லது "பெருந்தன்மையின் மகன்" என்றோ பெயரிடலாம்!

அவன் தனது நடிப்பின் விளையாட்டை நன்கு திட்டமிட்டு, அப்போஸ்தலர்களை அடைந்தான்.[33] அவன் என்ன சொன்னான் அல்லது செய்தான் என்பதைச் சரியாக நாம் அறியவில்லை, ஆனால் பின்வரும் வார்த்தைகள் அவனது செயலில் இருந்திருக்க வேண்டும்: "அநேக வருடங்களாக சப்பீராளும், நானும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். குறைவுள்ள நமது சகோதர சகோதரிகளுடன் இந்த ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துகொள்வது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. அநேக வருடங்களாக நாங்கள் ஒரு விலையுயர்ந்த நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்தோம் (சற்று பொறுத்து) நேற்று நாங்கள் அதை விற்றோம்." மலர்ந்த, மற்றும் இரக்கமுள்ள முகத்துடன், அவன் அப்பணத்தை அப்போஸ்தலராகிய பேதுருவின் பாதத்தில் வைத்து, "இதோ அதன் விற்கிரயம்" என்று கூறினான். பிறகு அந்தப்பணம் எவ்வளவு என்று அறிவித்து, அமெரிக்கையுடன் "இது ஒன்றுமில்லை, உண்மையில் ஒன்றுமில்லை" என்று பதில் அளிக்கத் தயாராக நின்றான். ஆனால், அவனது மாய்மாலம் வெளிப்படும் அதிர்ச்சியை அவன் பெற்றான்!

> பேதுரு அவனை நோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்தில் இருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்" என்றான் (வ. 3, 4).

வசனம் 1:24ல் தேவன் "எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறவர்" என்று விளக்கப்பட்டார் (இ.வ. எபி. 4:13). இயேசு தமது சொந்த ஊழியத்தில், மனுஷருடைய இருதயங்களின் சிந்தனையை அறிந்திருந்தார் (மாற். 2:8). இப்பொழுது தேவன் மற்றும் கிறிஸ்துவினுடைய ஆவியினால் பேதுரு, அனனியாவின் ஆத்துமாவில்[34] உள்ள தீமையை வெளிப்படுத்தி அது சபையை மூழ்கடிக்கும் ஒரு மறைவான பாறையாயிருப்

பதைக் காட்டினார்.

பேதுருவின் கூற்றிலிருந்து நமக்கு அநேக உண்மைகள் புலப்படுகின்றன. முதலாவது, சாத்தான்[35] தனது இருதயத்தை "நிரப்ப" அனனியா அனுமதித்ததாகப் பேதுரு கூறினார்-தேவன் அல்லது பரிசுத்த ஆவியானவரே ஒருவரின் இருதயத்தை நிரப்ப வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார் - இது தேவன் அல்லது பரிசுத்த ஆவியானவரின் ''கட்டுப்பாட்டின் கீழ்'' ஒருவர் இருக்கும் நிலையைக் குறிப்பிட்டது. தேவன் ஒரு மனிதரின் இருதயத்தை நிரப்புவது போன்றே சாத்தானும் நிரப்ப முடியும். இச்சொற்றொடர், "கட்டுப்பாட்டின் கீழ்" என்ற பொருளையே தருவதாக உள்ளது. அனனியா தனது எண்ணங்கள் மற்றும் செயல்களைச் சாத்தான் கட்டுப்படுத்தும்படி அனுமதித்தான். ஆயினும் அனனியாவின் விருப்பத்திற்கெதிராகச் சாத்தான் இதைச் செய்யவில்லை. பேதுரு அனனியாவிடம் ''நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன?" என்று கூறினார். சாத்தான் அனனியாவைத் தூண்டியிருக்க லாம், ஆனால் முடிவில் அனனியாவே தனது சொந்த செய்கைகளுக்குப் பொறுப்பாளியானான்![36] சாத்தான், அனனியாவின் காதுகளில், "பர்னபாவைப் போலவே உனது பெயரும் ஒவ்வொருவருடைய உதடுகளிலும் உச்சரிக்கப் பட்டால் நன்றாயிருக்குமல்லவா? அதை எப்படிச் செயல் படுத்துவதென்று உனக்குக் கூற என்னால் முடியும்'' என்று கிசுகிசுத்ததை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அனனியா இதற்குப் பதிலாக, அழுத்தத்துடன் "வேண்டாம், இதில் எனக்கு ஆர்வமில்லை'' என்று கூறியிருந்தால் சாத்தான் ஓடிப் போயிருப்பான் (யாக். 4:7). மாறாக, அனனியா தனது இருதயத் தின் கதவை அகலத் திறந்து, ஆச்சரியத்துடன் "இன்னும் அதிகம் சொல்லு" என்றான்! பிறகு சாத்தான் அவனது இருதயத்தை முழுவதும் நிரப்பினான். உங்கள் இருதயத்தில் சாத்தான் தன் காலை வைத்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்![37]

நிலத்தை விற்குமுன்னும், விற்ற பின்பும் அனனியாவுக்கு இருந்த விருப்பத் தேர்வானது, பேதுருவின் கூற்றில் புலப்படும் இரண்டாவது உண்மையாகும். அந்த உடைமையானது எப்பொழுதுமே அவனது ''கட்டுப்பாட்டின் கீழ்தான்'' இருந்தது; அனனியா தான் விரும்பியதைப் பாவம் எதுவு

மின்றியே செய்திருக்கக் கூடும். அவன் அதை விற்றிருக்க வேண்டியதில்லை, விற்ற பின்பு எல்லா பணத்தையும் கொடுத் திருக்கவும் தேவையில்லை. அனனியாவும் சப்பீராளும் நிலத் தின் கிரயத்தில் ஒரு பகுதியை வைத்துக் கொண்டது பாவம் அல்ல, ஆனால் ஒரு பகுதி கிரயத்தை முழுக் கிரயம் என்று பொய் சொன்னதே அவர்களின் பாவம் என்று மறுபடியும் இங்கு வலியுறுத்துகின்றேன்.

மூன்றாவதாக, அனனியா பொய் கூறியதாகப் பேதுரு குற்றம் சாட்டினார். சாத்தான் "பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்" (யோவா. 8:44). சாத்தான் ஒருவரின் இருதயத்தை நிரப்பும்போது, பொய்யானது இயற்கையாய் ஓடி வருகிறது. ஆயினும், இங்கு அனனியா தேவனிடத்தில் பொய் சொன்னான் என்பது விசேஷமாகக் குறிப்பிடத் தக்கதாய் உள்ளது. வசனம் 3ல் பேதுரு, அனனியா "பரிசுத்த ஆவியிடம்" பொய் கூறியதாகக் குறிப்பிட்டார், மற்றும் வசனம் 4ல் "நீ மனு ஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்" என்று வலியுறுத்தினார். இங்கு வாக்கியச் சொல் எச்சம்[38] இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம்-நீ மனுஷரிடம் மட்டுமல்ல, தேவனிடத்திலும் பொய் சொன்னாய் என்பது போன்றது-ஆனால் அனனியா தேவனிடத்தில் பொய் சொன்னான்[39] என்ற உண்மையே இங்கு வலியுறுத்தப்படுகிறது. "பொய்" என்ற சொல் அனனியாவின் இருதயத்தில் புகுந்தபோது, அவன் அப்போஸ்தலர்களிடத்திலும் ... சபையினிடத்திலும் பொய் சொல்லுவதையே எண்ணியிருப்பான். ஆயினும், அப்போஸ் தலர்கள் தேவனுடைய ஆவியானவரால் நிறையப் பெற்ற வர்கள்-சபை தேவனுடைய ஆலயமாகும் - எனவே இவர் களிடத்தில் அனனியா பொய் சொன்னபோது, தேவனிடத் திலேயே பொய் சொன்னதாகின்றது!

அடிப்படையில் எல்லாப் பாவங்களும் தேவனுக்கெதிரான வையே. அது மக்களைப் பாதித்தாலும் பாதிக்காவிட்டாலும்; பாவத்தின் அடிமூலத்தைப் பார்க்கையில் அது சர்வவல்ல வருக்கு[40] எதிரான முரட்டாட்டமாகவே உள்ளது! இதை உங்கள் சிந்தனையில் வைத்துக் கொள்ளுங்கள். அனனியா சப்பீராளின் பாவத்தின் விளைவைப் பரிசோதிக்கும் அடுத்த கணத்தில் இது உதவும்.

அனனியாவினிடம் பேதுரு கூறியதுபற்றி இன்னும் ஒரு விளக்கம் தரப்பட வேண்டும்: பேதுரு, அனனியாவின்மேல் ஒரு சாபத்தைக் கூறவில்லை. அனனியாவின் பாவத்தைக் குறித்துப் பேதுரு நேரடியாகப் பேசினார், ஆனால் மரணத்தைப்பற்றிய வார்த்தை எதுவும் அதில் இருக்கவில்லை. அடுத்த என்ன நடக்கும் என்பதைப்பற்றி, மற்றவர்கள் போலவே பேதுருவும் ஆச்சரியத்தில் இருந்தார்.

> அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம் பண்ணினார்கள் (வ. 5, 6).

பல விளக்கவுரையாளர்கள் இவ்வசனங்களுக்கு வருகையில், தங்கள் பற்களைக் கடிக்கத் தொடங்குகின்றனர். தங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்கின்றனர் மற்றும் தங்கள் முடியைப் பிய்த்துக் கொள்ளுகின்றனர்.[41] சிலர், ‘‘இது ஒருபோதும் நடக்கவில்லை! பின்னாளில் உறுப்பினர்களைத் தக்க வைப்பதற்காக இக்கதை கண்டு பிடிக்கப்பட்டது!’’ என்று கூவுகின்றனர். மற்றவர்கள், “ஏதோ சில நடந்திருக்கும், ஆனால் பின்னாளில் இதற்கு அற்புதப் பண்பை அளிக்கும்படி இக்கதை ஜோடிக்கப்பட்டது’’ என்று அறிவிக்கின்றனர். மற்ற சிலர், பேதுருவின் நேரடியான கூற்றின் வல்லமையால் “அனனியா அவ்விடத்தில் மாரடைப்பு ஏற்பட்டு விழுந்து மரித்திருக்கலாம்” என்று ஒப்புக் கொள்ளுகின்றனர். ஏறக்குறைய எல்லாருமே பேதுருவை விமர்சிக்கின்றனர். ஒருவர், ‘‘அவர் இன்னமும் பரிசுத்த ஆவியானவரால் முற்றிலும் ஆட்கொண்டிருக்கப்பட வில்லை’’ என்று குற்றம் சாட்டுகின்றார். இன்னொருவர், பேதுருவுக்குச் சார்பாக (?) “மேய்ப்புப் பணிக்கு அவர் புதியவர் என்பதை நாம் நினைவு கூற வேண்டும். இந்த நிகழ்ச்சியானது மந்தையை இன்னும் சாந்தமாய் நடத்த வேண்டும் என்று அவருக்குப் போதித்தது” என்று கூறுகின்றார்.

அனனியாவுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி அநேக கருத்துக்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும்:

*(1) லூக்கா கூறியுள்ளபடியே சரியாக அது நடந்தது! இல்லையென்றால், லூக்கா ஒரு நம்பத் தகுந்த சாட்சியல்ல என்றும், நாம் இந்நூலில் அவர் கூறியுள்ள வேறு எதையும் நம்ப முடியாது என்றும் ஆகிறது!*

*(2) பேதுரு தாம் செய்ததில், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டார்! (சில சமயங்களில் பேதுரு தவறுகள் செய்தார் [கலா. 2:11-13], ஆனால் ஆவியானவரின் நேரடியான கட்டுப்பாட்டில் இருக்கையில் அவர் அவ்வாறு செய்யவில்லை.) 5:1-11ன் மையப் பாத்திரம் அனனியாவோ அல்லது சப்பீராளோ அல்லது பேதுருவோ அல்ல, ஆனால் அது பரிசுத்த ஆவியானவரே!*

*(3) தேவனுடைய பிரதிநிதியாக இருந்து பேதுரு பேசினார். தேவனுடைய ஆவியானவரே, பேதுருவுக்கு, அனனியாவும் சப்பீராளும் செய்ததை வெளிப்படுத்தினார். அனனியாவின் பாவம் அப்போஸ்தலர்களுக்கெதிரானதல்ல, ஆனால் தேவனுக்கெதிரானது என்பதைப் பேதுரு தெளிவாக்கினார்.*

*(4) அங்கு நடந்தது தேவனிடத்திலிருந்து வந்த நியாயத் தீர்ப்பாகும்.[42] "ஜீவனை விட்டான்" என்ற சொற்றொடரானது ''ஆத்துமா'' என்ற வார்த்தையுடன் ''வெளியே''[43] என்ற முன்னிடைச் சொல் இணைந்த கிரேக்கக் கூட்டு வார்த்தை யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. வழக்கத்திற்கு மாறான இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னொரு தடவை 12:23ல்[44] மட்டுமே காணப்படுகிறது. இவ்விடத்தில் ஏரோதுக்கு வந்த நியாயத்தீர்ப்பு பற்றிப் பேசப்படுகிறது: "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்." "இறந்தான்" என்ற வார்த்தை 5:5ல் உள்ள "ஜீவனை விட்டான்" என்பது போலவே உள்ள கிரேக்க வார்த்தையாகும். அனனியா மரித்த பிறகு, "இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் பயமுண்டாயிற்று" என்பதைக் கவனியுங்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு மாரடைப்பு வந்து விடும் என்று பயந்தார்களா? இல்லை. அனனியாவின் மரணம், அவர்களை தேவனுக்குப் பயப்படும்படி செய்தது[45]! (இதை தேவனுக்குப் "புறம்பான பண்பு" என்று எண்ணுபவர்கள், லேவியராகமம் 10ல் நாதாப் மற்றும் அபியுவுக்கும், 2 சாமுவேல் 6ல் ஊசாவுக்கும் தேவன்*

*செய்ததை மறந்து விடுகின்றனர், பின்னாளில் நடபடிகள் 12ல் ஏரோதுக்கு அவர் செய்ததைக் குறிப்பிட அவசியமில்லை!)*

*என்ன நடந்தது என்பதுபற்றி நான் அதிகமாக அறிய வில்லை. அனனியா மனந்திரும்ப ஒரு வாய்ப்பு இருந்ததா இல்லையா*[46] *என்றும் நான் அறியவில்லை. அனனியாவையும், அவன் மனைவி சப்பீராளையும் தேவன் எவ்விதம் அடித்தார் என்றும் நான் அறியவில்லை.*[47] *இருப்பினும் இதை நான் அறிந்திருக்கிறேன்: அன்று நடந்ததை தேவன் அன்றைய கிறிஸ்தவர்களுக்கும், இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் (நீங்களும் நானும் உட்பட) ஒரு பாடமாக விளங்கும்படி விரும்பினார்.*

*மனிதனோடு செயலாற்றும் விதத்தில் காலங்கள் தோறும் தேவன், பாவத்தைக் குறித்து தாம் மிகவும் வினயமாயிருப்பதை வலியுறுத்தினார். அவரது மக்கள் அவருடனான உறவில் ஒரு புதிய நிலையில் நுழைகையில் இது அடிக்கடி நிகழ்ந்துள்ளது. இவ்விதமாக, ஆசாரியத்துவம் ஏற்படுத்தப்படுகையில் அவர் நாதாப் மற்றும் அபியூ ஆகியோரை அடித்தார் (லேவி. 10), தாவீதின் தலைமையில் இஸ்ரவேலர்கள், தேவனுடனான உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளுகையில் அவர் ஊசாவை அடித்தார் (2 சாமு. 6).*

*நடபடிகள் 5ல் நடந்த இச்சம்பவத்திற்குச் சிறந்த இணைச் சம்பவம், இஸ்ரவேலர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் நுழைகையில் ஆகான் என்பவனுக்கு நடந்த நிகழ்ச்சியில் காணப்படுகிறது. 5:2ல் உள்ள “வஞ்சித்து வைத்து” என்பதற்கும், யோசு. 7:1ன் கிரேக்க மொழிபெயர்ப்பில் ஆகான் செய்ததைக் கூறும் வார்த்தைக்கும் கிரேக்க மொழியில் ஒரே விதமான வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் பிள்ளைகள் முதன்முதலில் எரிகோ என்ற நகரத்தைப் பிடித்தனர். விலையுயர்ந்த உலோகங்கள் யாவும் கர்த்தருடைய பொக்கிஷசாலைக்குச் சேர வேண்டும் என்று யோசுவா, வீரர்களுக்குக் கூறினார். நகரத்தை அவர்கள் பிடிக்கையில், ஆகான், அழகிய பல விலைமதிப்புள்ள பொக்கிஷங்களைக் கண்டான். அவன் கண்டவைகளைக் கொடுக்க வேண்டிய நேரம் வந்தபோது, பொருளாசை அவனைப் பற்றிக்கொண்டது, எனவே “சிலவற்றை” அவன் வைத்துக் கொண்டு, எல்லாவற்றையும் கொடுத்துவிட்டதாக*

நடித்தான். அழிவு தொடர்ந்தது. ஆகானுடைய வஞ்சனை, இஸ்ரவேல் மக்களுக்கான தேவனுடைய திட்டத்தை அழிவுக் குள்ளாக்கிற்று. ஆகானையும் அவனுக்குள்ள யாவற்றையும்[48] அழிக்கின்ற காட்சியுடன் இச்சம்பவம் முடிவடைந்தது. தேவனு டைய மக்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டின் நுழைவாயிலில் இருக்கையில், தாம் பாவத்தைக் குறித்து வினயமாயிருப்பதை அவர்கள் அறிய வேண்டுமென்று தேவன் விரும்பினார்! பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தேவனு டைய புதிய மக்கள் கிறிஸ்தவ யுகத்தின் நுழைவாயிலில் இருக்கும்போது, அவர்கள் அதே சத்தியத்தை கற்றுக் கொள்ளும்படி அவர் விரும்பினார்!

நடபடிகள் 5ல் உள்ள துன்பவியல் காட்சியானது பின்வரும் வசனங்களுடன் முடிவடைகின்றது: ‘‘வாலிபர்[49] எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி,[50] வெளியே எடுத்துக்கொண்டு போய், அடக்கம்பண்ணினார்கள்’’ (வ. 6). சடங்குகள்[51] இல்லாமை மற்றும் திடீரென்று நடந்தது நமக்கு, நாதாப் மற்றும் அபியூ ஆகியோர் கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியால் பட்சிக்கப்பட்ட பின்பு நடந்ததை நினைவூட்டுகின்றது: “மோசே சொன்னபடி அவர்கள் கிட்ட வந்து, அவர்களை அவர்கள் உடுத்தியிருந்த சட்டைகளோடும் எடுத்துப் பாளையத்துக்குப் புறம்பே கொண்டு போனார்கள்” (லேவி. 10:5).[52] சிலர், அனனியாவின் சவ அடக்கத்தில் அவசரம் காட்டப்பட்டதற்குக் காரணம், அம்மரணம் எருசலேம் நகரில் நடந்தது, அங்கு சவ அடக்கம் மரணமடைந்த நாளிலேயே நடந்து விட வேண்டும் என்று யோசிக்கின்றனர் - ஆனாலும், சவ அடக்கம் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்றாலும், அவ்வளவு அவசரம் தேவையில்லை. சவ அடக்கம் நடந்த முறையானது பாடத்தின் ஒரு பகுதியாகும். சடங்குகள் எதுவு மின்றி சவ அடக்கம் நடைபெறுவதென்பது ஒரு மிருகத்தைப் புதைப்பது போன்றதாகும் (எரே. 22:19).

துன்பவியல் இத்துடன் முடியவில்லை நடபடி II வர வேண்டியதாயிருந்தது. இந்தச் சதியாலோசனையில் சப்பீ ராளும் ஒரு பங்காளியாய் இருந்தாள். “ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்” (வ. 7). சப்பீராள், அனனியா

வுடன் வந்திராதது ஏன்? அநேகமாக, குடும்பத் தலைவன் என்ற முறையில் அனனியா பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து, பிறகு அங்கு நடக்கும் உணர்வுப்பூர்வமான நிகழ்ச்சிகளை, தனது மனைவியிடம் வீடு திரும்பிப் பகிர்ந்து கொள்ளலாம் என்று திட்டமிட்டிருக்கலாம். அவன் உடனடியாக திரும்பி வராதபோது, ஒருவேளை அவனது கொடையினால் உண்டான கொண்டாட்டம் நீண்டிருக்கும் என்று அவள் எண்ணி யிருக்கலாம். ஆயினும் நேரம் கடந்த போது அவள் (மனைவியர் செய்வது போலவே) கவலைப்பட ஆரம்பித்தாள்-எது அவனைத் தாமதிக்கச் செய்தது[53] என்று காண்பதற்காக அவள் வந்தாள்.

அவள் கணவன் இறந்து விட்டான் என்று அறியாமல் மூன்று மணி நேரம் எப்படிக் கடந்திருக்க முடியும்? பேதுரு அங்கிருந்தவர்களிடம் அதைப்பற்றி ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கக் கூடும்[54] - அங்கு நடந்திருந்தது அவர்கள் இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்த தால், அவர் கூறியபடியே[55] செய்தனர்! ஒருவேளை நடந்த தவறை[56] சரிசெய்து கொள்ள அவளுக்கு வாய்ப்பளிக்காத படிக்கு, பேதுரு அங்குள்ள ஒவ்வொருவரையும் இந்நிகழ்ச் சியை சப்பீராளிடம் கூறாதபடிக்கு தடை செய்திருக்கலாம். எப்படியிருப்பினும், தனது கணவனுக்கு என்ன நடந்தது என்று அவள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாலும், தனக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி எக்கருத்தும் இல்லாமலேயே அவள் அறைக்குள் வந்தாள்.

கூடும் இடத்திற்கு வந்தவுடன் அவள் என்ன கூறினாள்? ஒருவேளை பின்வரும் வரிகளில் உள்ளது போன்று அவள் பேசியிருக்கலாம்: "எனது கணவரை யாரேனும் பார்த்தீர்களா? அனனியா வீட்டைவிட்டு வந்து மூன்று மணி நேரமாயிற்று, நான் கவலையாயிருக்கிறேன்!" அவள் என்ன கூறியிருப்பினும், பேதுரு அவளது நடக்கைகளுக்கு அளித்த பதிலைக் காட்டிலும் அதிகமாக அவளது சொற்களுக்குப் பதிலளிக்கவில்லை. "பேதுரு அவளை[57] நோக்கி: நிலத்தை[58] இவ்வளவுக்குதானா[59] விற்றீர் கள், எனக்குச் சொல் என்றான்" (வ. 8அ). ஒருவேளை அவர் தரையில் கிடந்த பணக்குவியலைச் சுட்டிக்காட்டியிருப்பார்.

அவரது கேள்வி சப்பீராளுக்கு எவ்வளவாய் திகைப்புண்

டாக்கியிருக்கும்! அவள் தனது கணவனைக் காண வந்தாள், அங்கு அவர்களின் காணிக்கையைப்பற்றி அவள் சூடான கேள்வி கேட்கப்பட்டாள்! அவள் இதயம் வெகுவாய்த் துடிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. "ஏதோ ஒன்று சரியில்லை!" என்று அவள் எண்ணியிருக்க வேண்டும். என்ன நடந்திருந்தது என்பதற்கு ஆதாரம் தேடி அவள் ஒருவேளை சுற்றுமுற்றும் பார்த்திருப்பாள், ஆனால் கவனித்துக் கொண்டிருந்தவர்களின் முகங்களில் இருந்து அவள் ஒன்றும் அறிய முடியவில்லை. மனந்திரும்பவும், தனது பொய் நடிப்பை அறிக்கையிடவும் அவள் ஒரு வாய்ப்புப் பெற்றாள் (8:22; 1 யோவா. 1:9), ஆனால் மேட்டிமையானது அவளது பாவத்தை ஒப்புக்கொள்ள அவளை அனுமதிக்கவில்லை, மிகவும் அழுத்தமாக அவள், "ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்" (வ. 8ஆ).

''கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு[60] நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?"[61] (வ. 9அ) என்று கேட்கையில் பேதுரு வருத்தத்துடன் தனது தலையை அசைத்திருக்க வேண்டும். அனனியாவும் சப்பீராளும் பரிசுத்த ஆவியானவரைச் "சோதிக்கிறதற்கு" விருப்பம் கொண்டிருந்ததில்லை என்பதில் நான் நிச்சயமாய் இருக்கிறேன். பாராட்டைப் பெறுவது, பட்டங்கள் பெறுவது, முதுகில் தட்டிக் கொடுக்கப்படுவது ஆகியவையே அவர்களின் நோக்கமாய் இருந்தது. ஆயினும், "கர்த்தருடைய ஆவியைச் சோதிப்பதே" அவர்கள் செயல்களின் நடைமுறை விளைவாய் இருந்தது என்பதை சப்பீராள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார்!

தேவனைச் சோதிப்பது என்பதன் பொருள் என்ன என்று புரிந்துகொள்ள, வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் தங்கள் மனவிருப்பம், முரட்டுத்தனம் மற்றும் கீழ்ப்படியாமையினால் தேவனுடைய பொறுமையை மறுபடி, மறுபடி சோதித்ததை எண்ணிப்பாருங்கள் (யாத். 17:2; உபா. 6:16). வீடு திரும்புகையில், தனது விருப்பத்தின்படிப் பெற்றோரின் பொறுமையைச் சோதிக்கும் குழந்தையை நினைத்துப் பாருங்கள்!

தேவனைச் சோதிப்பது என்றால் - தேவன் தாம் சொல்லியதைச் செய்வாரா என்று பார்க்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் சென்று - அவரை சோதித்துப் பார்ப்பது என்று பொருள்படும். இயேசு, சாத்தானால் சோதிக்கப்பட்டபோது,

அவர் தேவாலயத்து உப்பரிகையிலிருந்து கீழே குதிக்கும் படியும், தேவ தூதர்கள் நிச்சயமாய் அவரைத் தங்கள் கரங்களில் ஏந்திக் கொள்வார்கள் என்றும் சாத்தான் அவருக்கு ஆலோ சனை கூறினான். இயேசு உபா. 6:16ல் இருந்து, ''உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" (மத். 4:7) என்று மேற்கோள் காட்டினார். தேவனுடைய வாக்குத்தத்தங் களை சோதித்துப் பார்ப்பது அவர்மேலுள்ள நம்பிக்கை யின்மையை வெளிப்படுத்தும்[62] என்று இயேசு அறிந்தார்.

அனனியா சப்பீராளின் பாவம் எவ்வளவு மோசமானது என்பதைப் பேதுருவின் வார்த்தைகள் வலியுறுத்தின - மேலும் அது வெளிப்படுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டியது ஏன் அவ்வளவு முக்கியமானதென்றும் வலியுறுத்தின. லூயிஸ் பாஸ்ட்டர் என்ற விளக்கவுரையாளர் எழுதினார்:

> பாவச் செயலைத் தொடர்ந்து பேரச்சமூட்டும் விளைவுகள் இல்லாதிருந்தால், வஞ்சனையானது அறியப்படுகையில்[63] விசுவாசிகளிடையில் அதன் விளைவு மோசமாயிருக்கும். நேர்மையின்மை என்பது இலாபகரமாகத் தோன்று வதுடன், ஆவியானவர் வஞ்சிக்கப்பட முடியும் என்ற முடிவு தொடரும். தேவன் இவ்வித மாய்மாலம் மற்றும் வஞ்சகம் ஆகியவற்றைப் பொறுக்கமாட்டார் என்பதை எவ்வித சந்தேகமுமின்றி ஏற்றுக் கொள்வதற்கு இவ்வித செயல்களை அவைகளின் ஆரம்பத்திலேயே சரியாக்குவது மிகவும் முக்கியமாய் இருந்தது.

அனனியா மற்றும் சப்பீராளின் பொய்யானது, குழந்தைப் பருவத்திலிருந்த சபையானது, இடறி விழுந்திருக்கக்கூடிய அளவுக்கு உண்மையிலேயே மறைவான ஒரு பெரிய பாறையாகவே இருந்தது. அவர்களின் வஞ்சனை வெற்றி யடைந்திருந்தால், ஆவியினால் வழிநடத்தப்பட்ட அப்போஸ் தலர்களின் நம்பகத்தன்மை மற்றும் அதிகாரம் ஆகியவை கேள்விக்குறியாவதோடு, சபையானது செயலூக்கம் கொண்ட தலைமைத்துவத்தை இழந்திருக்கும்!

இருப்பினும் அவர்களின் பொய் நடிப்பு வெற்றியடை யாதபடி தேவன் நிச்சயப்படுத்தினார். தனது பாவத்தை அறிக்கையிடக் கிடைத்த வாய்ப்பை சப்பீராள் புறக்கணித்

தாள். பேதுரு கவலையுடன் அவளிடம்: ''இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற் படியிலே[64] வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டு போவார்கள்" என்றான் (வ. 9ஆ). அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தொடர்ந்தது! அவளது கணவன் மரித்து, ஏற்கனவே அடக்கம் பண்ணப்பட்டது மட்டுமல்ல; அவளும் அந்தப் பயங்கரமான தீர்ப்பை[65] பெறவேண்டியிருந்தது!

இச்சமயம் எதை எதிர்பார்ப்பது என்பதைப் பேதுரு அறிந்திருந்தார் (இதற்குமுன் நடந்ததை[66] மறுபடி எண்ணிப் பார்க்கத்தான் அவருக்கு மூன்று மணி நேரம் இருந்ததே), ஆனால் சப்பீராளின் மரணம் பேதுருவால் தூண்டப்பட்ட தல்ல, தேவனாலேயே தூண்டப்பட்டது என்பதை நான் மறுபடியும் வலியுறுத்துகின்றேன்.

> உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள்.[67] வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப் போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டு போய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள். சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண் டாயிற்று (வ. 10, 11).

"இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று" என்று லூக்கா வலியுறுத்தினார். வேய்மவுத் அவர்களின் மொழிபெயர்ப்பில் அவர்கள் ''பயத்தினால் அடிக்கப்பட்டனர்" என்று கூறப்படுகிறது. பெக் அவர்களின் மொழியாக்கத்தில் இது அவர்கள் "பயமடைந்தனர்" என்று கூறப்படுகிறது. உண்மையில், லூக்கா இரண்டு இடங்களில் (வ. 5, 11) அவர்களின் பயத்தை-வாசகர்கள் தவறவிட்டு விடாதபடிக்கு - குறிப்பிட்டுள்ளார்! தேவன் பாவத்தைக் குறித்து மிகவும் வினயமாயிருக்கிறார் - மனிதர்கள் அதை உணர வேண்டும்! ''மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார்'' என்று பவுல் கூறினார் (கலா. 6:7). இவ்விதம் செய்வதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் திருப்பித் தாக்கப்படும்!

எல்லாருக்கும் ஏற்பட்ட பயத்தைப்பற்றி எழுதுகையில்

லூக்கா, நாம் இதற்குமுன் இந்நூலில்[68] காணாத ஒரு முக்கியமான வார்த்தையை தவழ விட்டுள்ளார்: "சபை"[69] என்ற வார்த்தை. "சபை" என்பது "அழைக்கப்பட்டவர்கள்"[70] என்று பொருள்படும் ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையான ekklesia என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். Ekklesia என்ற வார்த்தை, கிரேக்கர்களால், ஒரு கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (மக்கள் ஒன்றாகக் கூடும்படி அழைக்கப் பட்ட எந்த ஒரு கூட்டத்தையும் இவ்வார்த்தை குறிப்பிடும்; 19:32, 39, 41ஐக் காணவும்). ஆயினும், கிறிஸ்தவத்தில், ekklesia என்பது ஒரு சிறப்பான பொருளைப் பெற்றுள்ளது: தேவனு டைய விசேஷித்த மக்கள் - இவ்வுலகத்தை விட்டு வெளியே அழைக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவுடன் புதிய உறவு கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்கள். நடபடிகளில் இவ் வார்த்தை, சில சமயம், தேவனால் அழைக்கப்பட்ட எல்லா மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது (20:28), மற்றும் சில சமயம் ஓரிடத்தில் கூடிவந்த அழைக்கப்பட்ட மக்களைக் குறிப்பிடுகிறது (அதாவது ஒரு உள்ளூர் சபையார், 8:1; 11:22; 13:1ஐக் காண்க).[71]

நடந்த நிகழ்ச்சியானது சபைக்குப் புறம்பே இருந்தவர் களுக்கு மட்டுமல்ல, சபைக்குள்ளே இருக்கும் நமக்கும் ஒரு சிறந்த பாடமாகும் என்பதை வலியுறுத்துவதற்காகவே "சபை" என்ற வார்த்தை இவ்விடத்தில் லூக்காவால் இடைச் செருகப்பட்டது! சபை உறுப்பினர்களாய் இருக்கும் நம்மில் யாரேனும் ஒருவர், அனனியா மற்றும் சப்பீராளின் அடையாள மற்ற கல்லறைகளை திகிலின்றி பார்க்க முடியுமா? தேவன் இத்தம்பதிகளை "பெரிய" பாவம் எதுவும் செய்துவிட்டதற்காக அடிக்கவில்லையே. நாம் அறிந்த வரையிலும், அவர்கள் கொலை, திருட்டு, வேசித்தனம், குடிவெறி அல்லது போதைப் பொருளைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றங்கள் எதுவும் செய்யவில்லை. அவர்கள் சபையில்[72] ஒரு பொய் மட்டுமே கூறினார்கள், எனவே மக்கள் அவர்களைக் காட்டிலும் தாங்கள் சிறந்தவர்கள் என்று எண்ணலாம். நாம் எப்போதாவது இப்படி எண்ணியுள்ளோமா? எப்போதாவது நாம் ஒருவரிடம், "நான் உங்களுக்காக ஜெபம் செய்வேன்" என்று-அந்நபருக்காக ஜெபிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்

என்பதால் அல்ல ஆனால் அது நாம் உண்மையில் இருக்கும் நிலையைக் காட்டிலும் அதிகமாக ஆவிக்குரியவர்கள் என்பது போலக் காட்டுவதால்-கூறியிருக்கிறோமா? மருத்துவமனையி லிருந்திருக்கிற ஒருவரிடம் எப்போதாவது நாம், "நீங்கள் வீட்டுக்கு வந்துவிட்டீர்களா? உங்களைக் காண வேண்டு மென்று நான் திட்டமிட்டிருந்தேன்" என்று - அந்நபரைக் காண உண்மையாகவே நாம் திட்டமிட்டிருந்தோம் என்பதால் அல்ல, ஆனால் நாம் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக நல்லவர் போல் காணப்பட வேண்டும் என்பதற்காக- கூறியதுண்டா?

அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோர் தங்கள் கொடுத் தலின் விஷயத்தில் கூறிய பொய்தான் அவர்களின் குறிப்பிட்ட பாவமாயிருந்தது. நாம் ஒவ்வொருவரும் நமது "வரவுக்குத் தக்கதாக" வாரத்தின் முதல் நாள் தோறும் உற்சாகத்தோடும், மனதில் நியமித்தபடியும் கொடுக்க வேண்டும் என்பதே சபைக்கென்று தேவன் நியமித்துள்ள நிரந்தரமான பொருளா தார ஏற்பாடாக உள்ளது (1 கொரி. 16:2; 2 கொரி. 9:6-13). நாம் நமது காணிக்கையைச் செலுத்தும் போது, "நாம் எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்துள்ளோம்; நமது வருமானத்திற்குத் தக்கதாக இக்காணிக்கை உள்ளது" என்று மறைமுகமாகக் குறிப்பிடுவதில்லையா? இல்லையென்றால் என்னவாகும்? நம்மில் யாரேனும் கூட நமது கொடுத்தலில் பொய் கூறுதல் என்ற குற்றத்தில் இருக்கிறோமா?[73]

இது நமக்கு மிகத் தெளிவான ஒரு கேள்வியை கொண்டு வருகிறது: நடபடிகள் 5ல் காண்பது போலவே இன்றும் சபையில் இப்பாவத்தைக் குறித்து தேவன் செயல்பட்டால் எப்படியிருக்கும்? அப்படி மட்டும் நடக்குமென்றால், சபைக் கட்டிடத்தின் கீழே நாம் ஒரு பிணவறையை வைத்திருக்கத் தேவையாயிருக்கும், சபை அலுவலர்களில் ஒரு மரண அலு வலரும் இருக்க வேண்டும், அடக்க ஊழியத்திற்கென்று சில உதவிக்காரர்களை நாம் நியமிக்க வேண்டியிருக்கும்! இந்த எண்ணமானது ரிக் ஆட்ச்லியின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது.

அனனியா சப்பீராளின் விஷயத்தில் செய்ததுபோல தேவன் இன்று பாவத்தைக் குறித்து செயல் புரியாமல் இருக்கலாம்.[74] ஆனால் இது, தேவன் பாவத்தைக் குறித்து அவ்வளவு வினயமா

யிருக்கிறதில்லை என்று நம் எண்ணங்களை அமைதிப்படுத்தி விடக்கூடாது!

> பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே (எபி. 10:30, 31).
>
> ஆதலால், ... நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி ... நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே (எபி. 12:28, 29).

## முழுவேகத்துடன் முன் செல்லுதல் (5:12-14)

அனனியா சப்பீராளின் நிகழ்ச்சியை விட்டு நீங்குமுன், சபை ஒழுங்குபற்றி ஒரு வார்த்தையாவது கூறப்பட வேண்டியது தேவையாயுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில்[75] தொடரப்பட்ட நன்கறிந்த வழக்குகள் சில, சபை முன்னோடிகளை இயேசு கட்டளையிட்டபடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தயங்கச் செய்கின்றன. அனனியா மற்றும் சப்பீராளின் நிகழ்ச்சியானது சபை ஒழுங்கு முறையை முக்கியத்துவப்படுத்திக் காட்டு கின்றது.

நடபடிகள் 5, சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு ஒரு முன் மாதிரியான சம்பவம் அல்ல என்று நான் உணருகின்றேன். நடபடிகள் 5ல் தேவன் செயல்பட்டார்; சபை ஒழுங்கு நடவடிக்கையில், உள்ளூர் சபையார் செயல்பட வேண்டும் (மத். 18:15-17; 1 கொரி. 5:4, 5). நடபடிகள் 5ல் அனனியாவும் சப்பீராளும் இந்த வாழ்விலிருந்து நீக்கப்பட்டனர்; சபை ஒழுங்கு நடவடிக்கையில், ஒழுங்குபடுத்தப்படவேண்டியவர் நமது ஐக்கியத்திலிருந்து (1 கொரி. 5:5, 7, 9, 11, 13; 2 தெச. 3:6) நீக்கப்பட வேண்டும். ஆயினும், நடபடிகள் 5க்கும், சபை ஒழுங்கு நடவடிக்கைக்கும் இடையே ஒரு சில இணைவுகளை நாம் காண முடியும்: சபையாரிடம் உள்ள பாவமானது

இயேசுவின் நோக்கங்களைச் சிதைக்கின்றது. பாவமானது உடனே கண்டிக்கப்படா விட்டால் பரவ ஆரம்பித்து விடுகிறது (விடும்!). மனஸ்தாபப்படாதவர்கள் - தங்களுக்காக மட்டு மின்றி, முழு சபையாரின் நன்மைக்காகவும் - ஒழுங்கு படுத்தப்பட வேண்டியது தேவையாய் உள்ளது.

அந்தக் கடைசிச் சிந்தனையை வலியுறுத்த என்னை அனு மதியுங்கள்: சபை ஒழுங்கு நடவடிக்கையில் அடிப்படை நோக்கம், தவறுகின்றவர்களை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதுதான் (1 கொரி. 5:5), ஆனால் அது நடக்க வில்லையென்றால் என்னவாகும்? அனனியா மற்றும் சப்பீராளின் விஷயத்தில் அது நடக்கவில்லை. சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு இன்னமும் மதிப்பு உண்டா? ஆம், அது நமது சரீரத்திலிருந்து பாவத்தை வேரறுத்துப் போட்டு, நாம் எங்கு நிலைநிற்கிறோம் என்பதை இவ்வுலகம் அறியும்படி செய்கிறது (1 கொரி. 5:1, 6, 7)!

சபை ஒழுங்கு நடவடிக்கையைத் தொடர்ந்து, சபை உந்தப்பட்ட, வளர்ச்சியடைந்த விபரம் தரப்பட்டுள்ளது ஏதோ தற்செயலானதல்ல! ஆகான்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த போது, இஸ்ரவேலருக்கு மாபெரும் வெற்றி தொடர்ந்தது போல, அனனியா மற்றும் சப்பீராளின்மேல் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் விளைவாக நற்செய்திக்குப் புதிய வெற்றிகள் கிடைத்தன!

> அப்போஸ்தலர்களுடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே[76] செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சால மோனுடைய மண்டபத்தில்[77] இருந்தார்கள். மற்றவர் களில் ஒருவரும் அவர்களுடனே[78] சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப் படுத்தினார் கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும்[79] விசுவாச முள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (வ. 12-14).

ஒழுங்கு நடவடிக்கையின் விளைவுகளைக் கவனியுங்கள்: (1) அப்போஸ்தலர்களின் நம்பகத்தன்மை குறைவு படாதிருந் தது. அவர்களால் இன்னமும் "அடையாளங்களும் அற்புதங்

களும்'' செய்ய முடிந்தது. (2) சபையில் ஐக்கியமானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் "எல்லாரும் ஒரு மனப்பட்டிருந்தனர்." (3) ஏதேனும் பெற்றுக்கொள்ளலாம்[80] என்பதற்காகச் "சபையில் சேர்ந்து கொள்ளலாம்"[81] என்றிருந் தவர்கள் பயமடைந்தனர்.[82] அவர்கள் "அவர்களுடனே சேரத் துணியவில்லை." (4) கிறிஸ்தவர்களாகாதவர்கள் கூட சபை யாரை மதித்தனர். "ஜனங்கள் அவர்களை மேன்மைப் படுத்தி னார்கள்.'' (5) ஒழுங்கு நடவடிக்கையானது சபையைப் பாதிக்கவில்லை என்பது நாம் நினைவுகூர வேண்டிய முக்கிய மான உண்மையாகும். அனனியா மற்றும் சப்பீராளின் கவலை தரும் முடிவானது உண்மையான விசுவாசிகளை எவ்விதத் திலும் தடுத்து நிறுத்தவில்லை. "திரளான புருஷர்களும், ஸ்திரீ களும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிக மாய்ச் சேர்க்கப்பட்டார்கள்."

சாத்தானுடைய திட்டம் தோல்வியடைந்தது சபைக்கு அனுகூலமாயிற்று, இது சாத்தானுடைய திட்டத்தின் வெற்றி சபைக்கு அழிவைக் கொண்டுவருவது போலவே உள்ளது! சாத்தான், சபையைப் பிரிக்கவும், கனவீனப்படுத்தவும், குறைக்கவும் விரும்பினான், ஆனால் சபையானது ஐக்கிய மானதாக, மேன்மைப்படுத்தப்பட்டதாக, வளருவதாக இருந்தது! ஆயினும் அடுத்த பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றபடி சாத்தான் இத்துடன் தனது முயற்சிகளை நிறுத்திக் கொள்ளவில்லை.

## முடிவுரை

நமக்கு, 4:32-5:14ல் இருந்து அநேக பாடங்கள் உள்ளன: நாம் சுயநலமற்றவர்களாய் இருக்கும்படி தேவன் விரும்புகின்றார். நமது வாழ்க்கையினால் நற்செய்தி ஊழியத்திற்கு உதவும்படி தேவன் விரும்புகின்றார். சபையின் தலைவர்களை (முன்னோடி களை) நாம் மதிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். தம்மை நாம் கனப்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்பு கின்றார், ஏனெனில் அவர் சகலத்தையும் அறிகின்றார், சகலத்தையும் காணுகின்றார். நாம் கிறிஸ்தவர்களாயிருப்பினும் பாவம் நம்மை விழப்பண்ணக்[83] காரணமாகும் என்று கூட நாம்

*இப்பாடத்தில் காண்கின்றோம்; நாம் எப்பொழுதும் நம்மைப் பற்றி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (1 கொரி. 10:12).*

*ஆயினும், மிக ஆழமாகப் பதியக்கூடிய பாடங்களில் ஒன்று, ஏன் சிலவற்றைச் செய்கிறோம் என்பது, என்ன செய்கிறோம் என்பதைப் போன்று முக்கியமானது என்பதாகும். அனனியா மற்றும் சப்பீராள் செய்யத் திட்டமிட்ட செயல் அடிப் படையில் நல்லதாகும்: அவர்கள், சபைக்கு, குறிப்பிடத்தக்க ஒரு காணிக்கை அளிக்க விரும்பினார்கள். ஆயினும், ஏன் அதை செய்தார்கள் என்பது அவர்கள் கொடுத்தலின் மதிப்பை ஒன்றுமற்றதாக்கி விட்டது: அவர்கள் மனிதரின் புகழ்ச்சியைப் பெறவேண்டும் என்பதற்காக அதைச் செய்தனர் - எனவே தங்கள் கொடையானது உள்ளதைக் காட்டிலும் பெரியதாய்த் தோன்றவேண்டும் என்பதற்காகப் பொய் கூறினர்.*

*கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் எனது நோக்கங்கள் என்ன? கர்த்தருக்கு என்னை ஒப்புக்கொடுப்பது சரியானது என்பதால் நான் அவருக்கு ஊழியம் செய்கிறேனா? அல்லது "மனுஷர் காணும்படியாக" சிலவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணுவதால் நான் அவருக்கு ஊழியம் செய்கின்றேனா?*

*நேர்மையான பரிசோதனையொன்று, மாபெரும் வைத்தி யரால் நமக்கு ஒரு பெரிய இருதய அறுவை சிகிச்சை தேவை யென்று வெளிப்படுத்தினால், அதைப்பற்றி தக்கதொரு ஏற்பாடு செய்வதற்கு இதுவே சரியான சமயமாகும். அனனியா மற்றும் சப்பீராளுக்குச் செய்ததுபோல தேவன் நம்மை அடித்து வீழ்த்தமாட்டார் என்றாலும், இவ்விரு மாய்மாலக்காரர் களுக்கு நேர்ந்ததுபோல திடீர் மரணம் நமக்கும் ஏற்படலாம்- மரணம் வருகையில் நம்மை உண்டாக்கினவரைச் சந்திக்க ஆயத்தப்படுவது என்பது மிகவும் தாமதமாகிவிடும். உங்கள் இருதயங்களில் இதைச் செதுக்கிக் கொள்ளுங்கள்: ஒருவர் ஆயத்தமாயிருக்கவில்லையென்றால், "ஜீவனுள்ள தேவனு டைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31)!*

## பிரசங்கக் குறிப்புகள்

*ரிக் ஆட்ச்லீ அவர்கள் "கொடுப்பதும் எடுப்பதும்" என்று அழைக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தை, நடபடிகள் 4:32-37 லிருந்து*

கொடுத்தார். அப்பிரசங்கத்தில் பாதிப்பகுதி, கிறிஸ்தவர்கள் தாராளமாய்க் கொடுப்பவர்களாய் மட்டுமல்லாது, தாராள மாய்ப் பெறுவர்களாய் இருக்கவும் கற்றுக்கொள்வது எப்படி என்ற தேவையின்பால் இருந்தது. இப்பாடமானது, எருசலே மிலிருந்த உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் திறந்த மனதுடன் இருந்தனர், அவர்கள் வாழ்க்கையின் தேவைகளை ஒப்புக் கொண்டிருந்தனர் என்பதை உறுதியாய்க் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாயிருப்பதில் அனு கூலமடைய நம்மில் ஒருவரும் விரும்புவதில்லை, சபைக்குப் பாரமாயிருக்கவும் நம்மில் ஒருவரும் விரும்புவதில்லை; அதே சமயம் நமது தேவைகளை உணர்த்தி, நமக்கு உதவ உண்மை யாகவே விரும்புகின்ற சகோதரர்களிடமிருந்து உதவியைப் பெற நமது மேட்டிமை உணர்வானது நம்மைத் தடை செய்து விடக்கூடாது.

நடபடிகள் நூலில் உள்ள முக்கியப் பாத்திரங்கள்பற்றி தொடர் பிரசங்கங்கள் பிரசங்கிப்பது இந்நூல் மூலமாகப் பிரசங்கிப்பதில் உள்ள ஒரு உற்சாகமான வழியாகும். ஒரே ஒரு விதிவிலக்கைத் தவிர (கலா. 2:13), பர்னபா வசீகரமானவரா யுள்ளார், அவர் எப்பொழுதுமே முன்மாதிரியான பண்புகளுட னும், யாரேனும் ஒருவரை உற்சாகப்படுத்தும் பண்புடனும் காணப்படுகிறார் (15:36-39ல் அவரோ அல்லது பவுலோ யார் செய்தது சரியென்று நீங்கள் நினைத்தாலும், பர்னபா தனது பெயருக்கேற்ற விதத்தில், ''ஊக்கப்படுத்தும் மகனாகவே'' நிலைத்திருந்தார்). நீங்கள் பயன்படுத்த விரும்பும் சில வசனப் பகுதிகள்: அப். 9:26-28; 11:22, 24-26, 30; 12:25; 14:4, 14; 15:2, 5, 12, 36-41; 1 கொரி. 9:6; கலா. 2:1, 9, 13; கொலோ. 4:10.

அனனியா மற்றும் சப்பீராளின் வரலாற்றிலிருந்து, “பாவத்தைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கக் கற்றுக் கொள்ளுதல்” என்ற வல்லமையுள்ள பாடத்தை விளக்கப்படுத்த முடியும் (இவ்வசனப்பகுதிகளின் மற்ற பாகங்கள் முன்னுரை மற்றும் முடிவுரை என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படலாம்). ஆகானின் வரலாற்றையும் (யோசுவா 7), அனனியா மற்றும் சப்பீராளின் வரலாற்றையும் இணையாகத் தருவது என்ற வழியில் இதை அணுகலாம். இப்படி நீங்கள் செய்தால், ஆகானுக்கு நேர்ந்த தற்கு இணையாக நீங்கள் யாக். 1:14, 15ஐக் கொண்டு வர

விரும்பலாம். நாடகவியல் விருப்பம் உங்களுக்கிருந்தால், இந்தப் பிரசங்கத்திற்கு நீங்கள் "மரணம் சபைக்குச் செல்லுகின்றது" என்ற தலைப்பைக் கொடுக்கலாம். ஆராதனை வேளையில் மாரடைப்பில் நிலை குலைந்தவர்களையும், பிரசங்கிக்கும் போது பிரசங்க மேடையிலேயே மரித்த பிரசங்கியர்களையும் நான் கண்டுள்ளேன்; ஆனால் (நான் அறிந்த வரையில்) தேவனால் அடித்து வீழ்த்தப்பட்ட ஒருவரையும் நான் கண்டதில்லை - நான் காண மாட்டேன் என்று நம்புகிறேன்!

---

குறிப்புகள்

[1]"அன்பின் விருந்துகள்" என்பது *agapais* என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இது *agape* என்பதன் பன்மை வார்த்தையாகும், இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் "அன்பு" என்பதற்குரிய விசேஷித்த வார்த்தையாகும். *Agapais* என்பது "அன்புகள்" (பெயர்ச் சொல்) என்று பொருள்பட்டாலும், இவ்வார்த்தை ஆதி கிறிஸ்தவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்ட ஐக்கிய விருந்துகளையே (இந்நாளில்கூட ஐக்கிய விருந்துகளை "ஐக்கியம்" என்று அநேகர் அழைப்பதுபோல) குறிக்க வந்ததாய் உள்ளது. [2]அப். 2:46. அநேக எழுத்தாளர்கள் 1 கொரி. 11ல் விவரிக்கப்பட்டுள்ள விருந்து என்பது அன்பின் விருந்தின் தவறான பயன்பாடாகும் என்று எண்ணுகின்றனர், ஏனெனில் கொரிந்தியர்கள் தங்களது அன்பின் விருந்தை கர்த்தருடைய பந்தியுடன் இணைத்ததால், அவையிரண்டும் இணைந்து ஒரு குடிக்கும் விருந்தாயிற்று. [3]நான் சிறு பிள்ளையாயிருக்கையில் பின்ட்டோ பருப்புகளைச் சமைக்கும் முன் அவைகளைப் "பிரித்தெடுக்கும்" பணி எனக்குத் தரப்பட்டது, சில சமயங்களில் அப்பணியில் நான் ஜாக்கிரதையாய் இருக்கவில்லை! [4]நீங்கள் கடல் ஒன்றினருகில் வாழ்பவராயிருந்தால், உங்கள் உரையைக் கேட்பவர் களுக்குப் பழக்கமான ஓரிரண்டு விளக்கங்களைச் சேர்த்துக் கூற நீங்கள் விரும்பலாம். [5]வார்த்தை விளையாட்டை நீங்கள் ரசிப்பதுண்டானால், "Ship" ("கப்பல்") என்ற வார்த்தை கிறிஸ்தவத்துடன் எப்படிப் பிணைக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க முடியும்: Fellowship, partnership, worship, leadership, stewardship முதலியன. [6]துரதிர்ஷ்டவசமாக, ஆதி சீஷர்களின் பண்பாக இருந்த இந்த ஐக்கியம் தொடர்ந்து இருக்கவில்லை (1 கொரி. 1:10-13). [7]அப். 2:46ல் அவர்கள் "ஒருமனப்பட்டிருந்ததாக" கூறப்படுகிறது. இந்த எல்லாச் சொற்றொடர்களும், அவர்களின் ஐக்கியம் புறம்பானதாய் மட்டுமின்றி, உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்தது என்பதைக் குறிப்பிடுகிறது. லூக்காவின் கூற்றுகள் சபையை முழுமையாகக் கூறுபவைகளாயிருப்பதை நாம் அநேகமாய் கவனிக்க வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒருமனப் பட்டிராத இருவரை (அனனியா, சப்பீராள் அதிகாரம் 5) நாம் அறிகிறோம். [8]*Plethos* என்ற வார்த்தையை மொழிபெயர்க்க கூட்டத்தார் என்ற வார்த்தை

*பயன்படுத்தப்பட்டுள்ளது. அநேக மொழிபெயர்ப்புகளில் (*KJV, NKJV, ASV*) "கூட்டத்தார்" என்ற வார்த்தையே காணப்படுகிறது.* RSV*யில் "தோழமை" என்றுள்ளது.* NASB*யில் plethos என்ற வார்த்தை இவ்விதம் மொழிபெயர்க்கப் பட்டதற்கு, அநேகமாக, "இது சிறப்பான உணர்வைப் பெற்றுள்ளது ... (யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில்) உள்ள மார்க்க சமூகத்தில் அவ்வாறு மதிக்கப்பட்டது" என்பது காரணமாயிருக்கலாம். (*F.F. *புரூஸ், நடபடிகளின் புத்தகம், புதிய ஏற்பாடு பற்றிய புதிய அகில உலக விளக்கவுரை,* rev. ed. [*கிராண்ட் ரேப்பிட், மிச்.:* Wm. B. Eerdmans Publishing Co., 1988], 100). [9]*ஆங்கிலத்தில் இவ்விடத்தில்* they *என்றுள்ளது (தமிழில் இது இல்லை) விற்ற கிரயங்களைக் குறிக்கின்றது.* [10]*எருசலேமில் எப்பொழுதும் இது உண்மையாயிருக்கவில்லை (ரோமர் 15:26), ஆனால் சற்று காலம் உண்மையாயிருந்தது.*

[11]*எனது இரண்டு வயதுப் பேத்தியிடம் ஒரு விவாதத்தைத் தொடங்க வேண்டுமானால், அவளுடைய பொருள் ஏதேனும் ஒன்றைச் சுட்டிக்காட்டி என்னுடையது என்றால் போதும்: "இது என்னுடைய மிதியடி" என்பது போல ஏதாவது கூறினால் போதும். உடனே அவள் நெருப்புப் பார்வை ஒன்றை வீசி, தனது நெஞ்சில் கை வைத்துத் தட்டி, "என்னுடைய மிதியடி!" என்று அறிவிப்பாள்!* [12]*அப். 12ல் யோவான் மாற்குவின் தாயாகிய மரியாளுக்கு எருசலேமில் ஒரு வீடு இன்னமும் இருந்தது, வேலையாட்களும் இருந்தனர் (வ. 12, 13).* [13]*ஆதி கிறிஸ்தவர்களின் சுயநலமற்ற தன்மையைக் கூறுவதில் உண்மை நடப்பு என்பது லூக்காவின் நோக்கங்களைப் பொறுத்த வரையில் தற்செயலானதாகும்.* [14]*இது உடன்படிக்கைக் கூடாரத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மனப்பூர்வமான காணிக்கைகளுக்கு (இ.வ. யாத். 36:5-7) ஒத்ததாக இருந்தது.* [15]*பொதுவான "சபை நிதி" என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் சில குறிப்புகளில் இது ஒன்றாகும்.* [16]*தேவையில் உள்ள உறுப்பினர்களுக்குச் சபை உதவி செய்வதை நான் கண்டுள்ளேன், ஆனால் இது முறையான காணிக்கைகளிலிருந்து செய்யப்படுகிறதே தவிர, நடபடிகள் 2 மற்றும் 4ல் விவரிக்கப்படுகின்றது போன்ற தியாகமுள்ள நடவடிக்கைகளினால் செய்யப்படுவதில்லை.* [17]*"தயவு"* (grace) *என்ற வார்த்தை charis என்பதிலிருந்து வருகிறது. இது தேவனுடைய தயவையோ அல்லது மனுஷருடைய தயவையோ குறிக்கக் கூடும் (லூக். 2:52ல் இவ்விரு வகையிலும் இவ்வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது). (தமிழில் தேவ கிருபை, மனுஷர் தயவு என்றுள்ளது.) தேவனுடைய கிருபையையே லூக்கா குறிப்பிட்டார் என்று அநேக மொழி பெயர்ப்பாளர்கள் உறுதியாக நினைத்தார்கள். ஆயினும் எனது மனதில், நடபடிகள் 2ன் முடிவுக்கும் நடபடிகள் 4ன் முடிவுக்கும் இடையில் உள்ள அநேக இணை நிகழ்வுகளின் அடிப்படையில் பார்க்கும்போது தயவு, என்பது மனுஷருடைய தயவையே குறிப்பிடுகிறது என்று தோன்றுகின்றது.* [18]*பர்னபா மத்திய தரைக்கடலின் வடகிழக்குப் பகுதியில் உள்ள (ஒரு வரைபடத்தைப் பார்க்கவும்) சீப்புருத் தீவில் பிறந்தவர். கொடுமையான உபத்திரவம் மற்றும் பொருளாதாரத் தேவை ஆகியவற்றால் யூதர்கள் சிதறடிக்கப்பட்டிருந்தனர்.* [19]KJV*யில், எபிரெய மொழியின் "யோசேப்பு" என்பதின் கிரேக்க உருவான "யோசே" என்றுள்ளது.* KJV*யில், பழைய ஏற்பாட்டுப் பெயர்களின் கிரேக்க வடிவங்களே வழக்கமாகக் தரப்*

*பட்டுள்ளது, இது மிகத் தெளிவானதாக இருப்பினும் குழப்பமுண்டாக்கு வதாகவும் உள்ளது. படிப்பவர்கள் குழப்பமடைவதைத் தவிர்ப்பதற்காக அநேக மொழிபெயர்ப்புகள் பழைய ஏற்பாட்டு எழுத்துக்களையே பயன்படுத்துகின்றன. [20]இங்கு அவர் தாம் விற்ற தொகை முழுவதையும் கொண்டு வந்தார் என்பது வலியுறுத்தப்படுகிறது-இது, இதைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிக்கு முரண்பாடானதாகும்.*

*[21]"அப்போஸ்தலரின் பாதத்தில்" என்ற கருத்து இந்நிகழ்ச்சி முழுவதிலும் ஊடாடியுள்ளது: பர்னபாவும் அனனியாவும் தங்கள் பணத்தை அப்போஸ் தலரின் பாதத்தில் வைத்தனர் (4:37; 5:2); சப்பீராள், பேதுருவின் பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள் (5:10). "பாதத்தில்" என்பது இடத்தை மட்டும் குறிப்பதல்ல, (மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களின் "பாதத்தில்" அமர்வது என்பது போல கீழ்ப்படிதலையும் குறிக்கும்). [22]"மகன்" (பர்) என்பது "ஒரு இயல்பைப் பெறும்" என்ற பொருள் தருகின்ற எபிரெய விளக்கமாகும்.* [23]NKJV, RSV, NASB. *"ஊக்கமூட்டும் மகன்" என்பது "பர்னபா" என்பதன் சரியான மொழியாக்கமாக இல்லையென்பதால் மொழியியல் அறிஞர்கள் பிரச்சனையடைகின்றனர், ஆனால் லூக்கா அந்தப் பெயரின் பொருள் இன்னதென்றுதான் கூறினார். [24]அடிப்படை ஆங்கிலத்தில் புதிய ஏற்பாடு.* [25]ASV, NEB. *"ஊக்கமளித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "ஆறுதல் அளித்தல்", "இன்பநலம் அளித்தல்" அல்லது "புத்தி சொல்லுதல்" என்றும் பொருள்படக்கூடும். இந்த வார்த்தைகள் யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவைகள் ஆகும். [26]ஒரு லேவியர் சொந்த மாக நிலம் வைத்திருக்க முடியுமா என்று விளக்கவுரையாளர்கள் இடறலடைகின்றனர், ஆனால் ஆசாரிய வகுப்பில் வந்த எரேமியா ஒரு நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்தார் (எரே. 1:1; 32:6-15). [27]உயர்வான ஒவ்வொரு விஷயத்திற்கும் எதிர்மறையான விஷயம் ஒன்று உண்டு.* [28]"But" *(தமிழில் இதற்குப் பதில் "ஒருவனும்" என்றுள்ளது) என்பது, அனனியாவும் சப்பீராளும் செய்த செயலை, எஞ்சியுள்ள சபையாரின் செயலோடு பொதுவாகவும், பர்னபாவின் செயலோடு குறிப்பாகவும் வித்தியாசப் படுத்திக்காட்டுகிறது. [29]வசனம் 3ல் அவர்கள் ஒரு நிலத்தை விற்றிருந்தனர் என்று நமக்குக் கூறப்படுகிறது. [30]''மாய்மாலக்காரன்'' என்பது ''ஒரு விஷயத்தின் கீழிருந்து பதில் தருபவன் அல்லது செயல் புரிபவன்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையின் சொல்லுக்கு சொல்லான மொழி பெயர்ப்பாகும். "ஒரு விஷயத்தின் கீழ்" என்பது நடிகருடைய முகத்தை ஒரு முகமூடியால் மூடி வைக்கும் வழக்கத்தைக் குறிக்கிறது.*

*[31]ஒரு உடன் ஊழியரான, விக்டர் லாய்டு அவர்கள், தங்கள் விற்பனை யிலிருந்து அவர்கள் பொருள் லாபத்தை எதிர்நோக்கியிருக்கலாம் என்று எண்ணுகிறார்: தங்களுக்குள்ள யாவற்றையும் விற்றுவிட்டதாக நடித்ததின் மூலம், "உபகாரம் பெறுவோர் பட்டியலில்" இடம் பெற்று, சபையிலிருந்து உதவிபெற அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். [32]அந்த நிலத்தின் தோராயமான மதிப்புக் கிரயத்தை அனனியா கொண்டு வந்திருந்தால் மட்டுமே அவனு டைய ஏமாற்று வேலை வெற்றி பெற்றிருக்க முடியும் என்று ஜிம்மி ஆல்லன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார், ஆகவே அந்தக் காணிக்கை நிச்சயம் அதிக மதிப்புள்ளதாகவே இருந்திருக்கும்* (Jimmy Allen, *Survey of Acts*, vol. 1 [Searcy, Ark.: By the Author, 1986], 58). *[33]சாலமோன் மண்டபத்திலிருந்து*

பார்க்கக்கூடிய வகையில் உள்ளதான,தேவாலயத்து அறைகள் ஒன்றில் அவர்கள் இருந்திருக்கலாம் (அப். 5:12). அது எந்த இடமாக இருந்திருப் பினும், அதற்குக் கதவு ஒன்றிருந்தது (வ. 9). [34]அனனியாவின் இருதயத்தில் உள்ளதைக் காணும்படிக்குப் பேதுரு, பரிசுத்த ஆவியானவரின் ஒரு வரத்தைப் பெற்றிருந்தாரா என்றோ அல்லது அனனியாவின் பாவத்தை வெளிப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர், பேதுருவின் மூலம் பேசினாரா என்றோ நாம் அறியவில்லை. [35]சாத்தான் என்றால் "எதிரி" என்று பொருள் படும், இது புதிய ஏற்பாட்டில் பிசாசானவனுக்கு ஒரு பெயராக பயன்படுத்தப்பட்டுள்ளது. [36]சில சமயங்களில், சிலர் (சில வேளைகளில் பாதி நகைச்சுவையுடன்), "சாத்தான் அதைச் செய்யும்படி என்னைத் தூண்டி னான்!'' என்று சொல்வதுண்டு. இந்நாட்களில், நாம் விரும்பாததைச் செய்யும்படி சாத்தான் நம்மைத் தூண்ட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். [37]கிறிஸ்தவர்கள் "விளையாட்டுக்காக'' ஜோசியம், அவுஜா போர்டு, அல்லது உலக அறிவுக்கு அப்பாற்பட்ட இவை போன்ற வேறு எதையாவது மேற்கொள்வது எனக்குக் கவலையளிக்கிறது. ஆதி சபையார் தங்கள் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருந்ததைப் புரிந்திருந்தனர். [38]இது வார்த்தைகளால் சொல்லப்படவில்லையென்றாலும், விளங்கிக் கொள்ளக் கூடியதைக் குறிக்கிறது. [39]வசனம் 3ல், அனனியா பரிசுத்த ஆவியிடம் பொய் சொன்னான் என்றும், வசனம் 4ல், அவன் தேவனிடத்தில் பொய் சொன்னான் என்றும் பேதுரு சொன்னதைக் கவனிக்கவும். பரிசுத்த ஆவியே அவர்கள் மத்தியில் தேவனாயிருந்தார் என்று ஆதி சபையார் விளங்கிக் கொண்டிருந்தார்கள். [40]சிலர், ஒரு செயல் மற்றவர்களைத் துன்பப்படுத்தாத வரையில் அதைச் செய்வது நல்லதே என்று திருப்தியடைந்து கொள்கின்றனர். தேவன் ஒன்றைச் செய்ய வேண்டாம் என்று கூறியிருக்கையில், அதைச் செய்தால், அவருக்குக் கீழ்ப்படியாததால், (வேறு யாரையும் நாம் துன்பப்படுத்தாவிட்டாலும்) தேவனை நாம் துன்பப்படுத்துகின்றோம்.

[41]இது பலமான உணர்ச்சியைக் குறிப்பதற்கான பழங்கால மற்றும் சமீபத்திய விளக்கங்களின் தொகுப்பாகும். [42]அனனியா மற்றும் சப்பீராளின் மரணத்திற்குப் பேதுரு அல்ல, தேவனே காரணம் என்பதை ஒவ்வொருவரும் புரிந்திருந்தனர்; இல்லையென்றால் பேதுருவின்மீது ஒரு குற்றச்சாட்டு கொண்டு வந்திருக்கப்படும் (J.W. McGarvey, *New Commentary on Acts of Apostles*, vol. 1 [Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 86). [43]KJVயில் இது "ஜீவனை விட்டான்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (அதாவது ஆவியை விட்டான்). [44]புதிய ஏற்பாட்டில் ''ஜீவனை விட்டான்'' (KJVயின் சொற்றொடர்) என்று பேசப்படுகையில், கிரேக்க மொழியில் "ஆவியை ஒப்புக் கொடுத்தல்'' என்பதற்கு அநேக வார்த்தைகள் உள்ளன. [45]அப்போஸ்தலர்கள்மேல் அவர்கள் கொண்டிருந்த மரியாதையின் அளவும்கூட உயர்ந்தது! (அப். 5:13ன் பொருளில் இதுவும் ஒரு பாகமாகும்.) [46]பேதுரு மற்றும்/அல்லது தேவன் இவ்விடத்தில் நியாயமற்று நடந்ததாகக் குற்றம் சாட்டுவோர், அனனியா தான் அடிக்கப்படுவதற்கு முன்பு மனந்திரும்ப வாய்ப்புப் பெறாதிருந்தான் என்று எண்ணுகின்றனர். நடந்தது என்ன என்பதற்கு ஒரு சுருக்கமான விவரிப்பையே (இது லூக்காவின் வழக்கம்) நாம் பெற்றுள்ளது உறுதி, அங்கு கூறப்பட்ட அல்லது நடந்த

யாவற்றையும் நாம் அறியவில்லை. அனனியா மனந்திரும்ப வாய்ப்புப் பெறவில்லையென்று கருதினால், அவனுடைய இருதயத்தை அறிந்த தேவன், அவன் மனந்திரும்பும் நிலையில் இருந்தானா இல்லையா என்று அறியவில்லை என்று நாம் எண்ணுகிறோம் (எபி. 6:4-6). "நாம் எப்படி விமர்சனம் செய்வது என்று அறிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாகவே தேவன் தமது உலகத்தை எப்படி நடத்திச் செல்வது என்று அறிந்திருக்கிறார்" (Anthony Lee Ash, *The Acts of the Apostles*, Part 1, The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1979], 84). [47]தேவன் விரும்பியிருந்தால், "இயற்கையான" விஷயங்களைப் பயன்படுத்தியிருக்க முடியும். தேவன் ஏரோதைக் கொல்வதற்குப் புழுக்களைப் பயன்படுத்தியிருந்தால், அனனியாவையும் சப்பீராளையும் தண்டிக்க அவர் மாரடைப்பைப் பயன்படுத்தியிருக்கவும் முடியும். [48]பாவத்தின் கேடுகளை இஸ்ரவேலரிடமிருந்து நீக்குவதற்கு பெரும் மாற்றங்களை விளைவிக்கும் அறுவைச் சிகிச்சை தேவையாயிருந்தது என்பது உறுதி. (பெரிய அறுவைச் சிகிச்சையில் பாதிக்கப்பட்ட பகுதி மட்டுமல்ல - முழுப் புற்றுநோயும் அகற்றப்பட்டதென்பதை உறுதி செய்துகொள்ள - புற்றுநோய்க் கட்டியைச் சுற்றியுள்ள திசுக்களும் அகற்றப்படுவதுண்டு.) [49]இந்த வாலிபர் யாரென்று நாம் அறியவில்லை. ஆயினும் அவர்கள் அங்கிருந்தார்கள் என்பது, நடந்த விஷயங்கள் யாவும் அப்போஸ்தலர்கள் மட்டும் இருக்கையில் நடக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது; ஓரளவிற்கு இது "வெளிப்படையாகவே" நடைபெற்றது. "வாலிபர்" என்ற வார்த்தையானது வலியுறுத்தப்படுவதென்பது, முதியவர்களைக் காட்டிலும் நன்றாகச் சில செயல்களை (கனத்த சுமைகளைச் சுமப்பது, மண்ணைத் தோண்டுவது முதலியன) வாலிபர்களால் செய்ய முடியும் என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றது. ஒவ்வொரு காலத்திலும் மக்கள் செய்ய வேண்டிய சில செயல்களைத் தேவன் வைத்துள்ளார். [50]சொல்லுக்குச் சொல், இது "அவனைச் சுற்றி" அல்லது "அவனை மூடி" என்று பொருள்படும், இது அவசரமாக நடந்த அடக்கத்தைக் குறிப்பிடலாம், ஒருவேளை (KJVயில் உள்ளபடி) அவனது சரீரத்தை அடக்கத் துணிகளால் (சேலையால்) சுற்றிக் கட்டியிருக்கலாம். அல்லது, சரீரத்தை எடுக்குமுன் அதைத் துணியால் மூடும் வழக்கத்தைக் குறிப்பிடலாம் - இந்நாளில் நாம் சரீரத்தை ஒரு துணியினால் மூடுவது அல்லது அதை எடுக்குமுன் பிணப்பை ஒன்றில் போடுவது போன்ற பழக்கமாயிருந்திருக்கலாம். அதை இரகசியமாய் வைப்பதற்காக என்பதை பிணத்தை மூடியதன் காரணத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளலாம் - பேதுரு, சப்பீராளை விசாரிக்கும்வரை மற்றவர்கள் அவனது மரணத்தை அறியாதிருப்பதற்காக அப்படிச் செய்திருக்கலாம்.

[51]இந்நாட்களில் நடப்பதைக் காட்டிலும் அதிகமாகவே அந்நாட்களில் அடக்க ஆராதனைச் சடங்குகள் அதிக நேரம் நடந்தன. [52]நாதாப் மற்றும் அபியூ ஆகியோரின் மரணத்தின்போது, அவர்களின் தகப்பனாகிய ஆரோன் அவர்களுக்காகத் துக்கப்படவோ அல்லது அடக்கத்தில் கலந்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை! [53]மற்ற காட்சிகளும் சாத்தியமானவைகளாயிருக்கின்றன. முதலாவது அவன் வந்து, முதல் புகழ்ச்சியின் அலைகளைப் பெற்றுக்கொள்வதும், பின்பு அவள் வந்து எஞ்சியுள்ள புகழ்ச்சியைப் பெறுவதும் திட்டமாயிருந்திருக்கலாம். ஆயினும் நிகழ்ச்சித் தொடரானது

இதற்கொப்பவே காணப்படுகிறது. [54]தடை விதிக்கப்படாதிருந்தால் அவ்வார்த்தை சப்பீராளுக்குப் பரவாதிருந்தது என்பது கற்பனை செய்யக் கடினமானதாகும். [55]எப்படிப் பார்த்தாலும், இது திகைப்பூட்டக்கூடியதே! பயனற்ற பேச்சுப் பேசுவதில் மனிதருக்குள்ள விருப்பத்தை அறிந்த நிலையில், வகுப்பறையில் நான் நகைச்சுவையாக, "நடபடிகள் புத்தகத்தில் உள்ளதிலேயே மாபெரும் அற்புதம் இதுதான்!'' என்று கூறுவதுண்டு. வேதாகம விமர்சகர்கள், நிகழ்ச்சியின் இப்பகுதியை "முடியாத ஒரு செயல்" என்று அழைக்கின்றனர், ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் வாழும் ஒருவரது சாட்சியைப் பார்க்கிலும், அன்று வாழ்ந்திருந்த ஒருவரின் சாட்சியத்தை நான் அதிகமாகவே நம்புகின்றேன்! நடந்ததைப் பார்த்த வர்கள், பிற்பாடு பேசும்படி அனுமதிக்கப்பட்டனர், ஏனெனில் வசனம் 5ல் ''இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும்'' என்றுள்ளது. [56]பேதுரு இவ்விதமாகத் தடை செய்திருந்தால், நிச்சயமாகவே அவரது நோக்கம் மிகச் சிறந்ததாகவே இருந்திருக்கும். ஒருவரை நன்கு கட்டியெழுப்புவதிலேயே நமது அன்பு வெளிப்படுகிறது (1 கொரி. 13:7). "பேதுரு அவனுக்கென்று ஒரு வலை விரித்தார்" என்று யோசனை செய்வதென்பது பேதுருவுக்கும், அதை அவருக்கு யோசனையாகக் கூறியவர்களுக்கும் ஏற்புடையதல்ல. [57]"பேதுரு அவளை நோக்கி" என்பது லூக்கா மறுபடியும் ஆவியானவரால் - சுருக்கமாக விவரங்கள் தருகின்றார் என்பதையே நமக்கு அறியச் செய்கிறது - நாம் அறிய வேண்டிய விபரங்களை மட்டுமே கூறுவது. [58]சப்பீராளின் பங்கேற்பு மற்றும் "நிலத்தை நீங்கள் விற்றீர்கள்'' என்ற வார்த்தைகள் ஆகியவை சிலரை, அந்நிலம் அனனியாவுக்கல்ல, சப்பீராளுக்கே சொந்தமாயிருந்தது என்று யூகம் செய்ய வைக்கிறது. [59]அனனியா நிலத்தை விற்ற தொகையாகக் கூறியதையே பேதுரு இவ்விடத்தில் கூறினார் என்பதை நாம் அறிய வேண்டும். சிலர், பேதுரு நிலத்தின் உண்மையான விற்கிரயத் தொகையை அறிவித்து, அதைச் சரியென்று அவள் ஒப்புக் கொள்ள வாய்ப்பிருந்ததாகக் கூறுவர் - ஆனால் அது அவள் மனந்திரும்பி அறிக்கையிட்டதைச் சுட்டிக் காட்டுவதாயிருக்கும். இவ்வாறு நடந்திருந்ததென்றால், அடுத்த வசனத்தில் பேதுருவின் வார்த்தைகளில் இருந்த கடுமைக்கு விளக்கமளிப்பது கடினமாகும். [60]"சோதித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ''தூண்டுதல்'' என்றும் பொருள்படும் (KJVயில் காண்க). இருப்பினும் "தூண்டுதல்" என்பதற்குரிய ஆங்கில வார்த்தை (tempt) "தவறு செய்யத் தூண்டுதல்" என்ற பொருளைத் தருவதாலும், யாக்கோபு, "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல [அதே கிரேக்க வார்த்தை]" (யாக். 1:13) என்று வலியுறுத்துவதாலும், "சோதிக்க" என்ற வார்த்தையே இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[61]இது தவறான வகையிலான ஐக்கியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இவர்கள் ஒத்துச் சென்றனர் (ஆமோஸ் 3:3ஐக் கவனிக்கவும்; KJV), ஆனால் தேவனுடைய சித்தத்திற்கு முரண்பாடான ஒரு செயலில் இவர்கள் ஒத்துச் சென்றனர். ஐக்கியம் மிகவும் முக்கியமானதாகும் (யோவா. 17:20-23), ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிதல் அதைவிட முக்கியமானதாகும் (இ.வ. மத். 10:34). [62]ஒரு கணவன் தனது மனைவியைச் "சோதித்து" ப் பார்க்க விரும்பினால், அது அவள் மேல் அவன் கொண்டுள்ள நம்பிக்கையால் அல்ல, அவளை நம்பாததினாலேயே அப்படிச் செய்கிறான். [63]இவ்வித மாற்றுக்கள்

யாவும் பொதுவான பதிவாயிருந்திருக்க வேண்டுமென்று பர்ட்டன் காஃப்மன் அவர்கள் நம்புகிறார் (காஃப்மன், 103). அப்படியிருந்தாலும் இல்லாவிட்டாலும், நடந்தவைகளின் உண்மைகள் நிறைவில் வெளியாகியே தீரும் (எண். 32:23). [64]நன்கறிந்த காலடியோசையை அவர் கேட்டிருக்கலாம், அல்லது அவர்கள் அங்கிருந்தனர் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அவருக்குக் கூறியிருக்கலாம். சவ அடக்கத்தை முடிப்பதற்கு ஏறக்குறைய மூன்று மணி நேரமாயிற்று என்பது உறுதி. [65]சப்பீராள் இவ்விடத்தில் "இரட்டை அதிர்ச்சி"யைப் பெற்றாள், இது அவளுக்கு மாரடைப்பை ஏற்படுத்தப் போதுமானதாயிருந்தது என்று விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். எப்படியிருப்பினும் அனனியாவும், சப்பீராளும் சில மணி நேர வித்தியாசத்தில் மாரடைப்பைப் பெற்றார்கள் என்பதற்கு எதிரான விஷயங்கள் ஒன்றும் இல்லை. இருவருமே "மாரடைப்பால்" துன்புற்றிருக்க வேண்டும், ஆனால் அதில் தேவனுடைய கரம் இருந்தது. [66]அவர் இன்னமும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராகத் தமது அறிவிப்பை வெளியிட்டார். [67]வசனம் 5ல் உள்ள அதே விளக்கமே இங்கும் உள்ளது-இது சப்பீராளுக்கு நேர்ந்த தெய்வீக நியாயத்தீர்ப்பாகும் என்று மறுபடியும் வலியுறுத்துகின்றது (வசனம் 5ற்கான குறிப்பைக் காணவும்). [68]KJVயில், நடபடிகள் 2:47ல் "சபை" என்றுள்ளது, ஆனால் சிறந்த கைப்பிரதிகளில், இவ்வசனத்தில் *ekklesia* என்று இல்லை (அப். 2:47க்கான குறிப்புகளைக் காணவும்). "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்ட முதல் இடம் 5:11 என்பது எவ்வித வழக்குக்கும் அப்பாற்பட்டதாகும். [69]நடபடிகளில் இவ்வார்த்தை இருபத்து மூன்று இடங்களில் பயன்பட்டுள்ளது. [70]*Ek* (வெளியே) + *kaleo* (அழைக்கப்படுதல்). எழுபதின்மரின் (Septuagint) மொழிபெயர்ப்பில் இவ்வார்த்தை இருப்பதால் இதன் அடிப்படைப் பொருள்பற்றிச் சிலர் அறைகூவல் விடுக்கின்றனர். ஆயினும் இதுவே இவ்வார்த்தையின் மூலப் பொருள் என்று நான் நம்புகின்றேன்.

[71]"வனாந்தரத்தில் கூடி வந்த [இஸ்ரவேல்] கூட்டத்தை" குறிப்பதற்கும் இவ்வார்த்தை ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 7:38). [72]"சபை" என்ற வார்த்தை "கூட்டம்" என்ற பொருளிலும் பயன்படுத்தப்படலாம், இவ்விடத்தில் இது கிறிஸ்தவர்களின் கூட்டத்தையே குறிக்கிறது (1 கொரி. 14:23ஐக் கவனிக்கவும்). [73]தீர்க்கதரிசியான மல்கியா இதை "தேவனை வஞ்சித்தல்" என்கிறார் (மல்கி. 3:8). [74]சில பாவங்கள் (கொலை, பாலியல் பாவங்கள் முதலியன) சரீரத்திற்குரிய மரணத்தை கொண்டுவர முடியும், ஆனால் இன்றைய நாட்களின் அநேக பாவங்களின் முழு விளைவுகள் நியாயத்தீர்ப்பின் நாள் வரைக்கும் காண முடியாதவைகளாயுள்ளன. [75]காலின்ஸ்வில் என்ற இடத்தில் (ஓக்லஹாமா) உள்ள கர்த்தருடைய சபையின் மூப்பர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது, இதற்கு நல்ல ஒரு உதாரணமாகும் - இம்மனிதர்களை நான் அறிவேன். [76]அப்போஸ் தலர்களின் கைகளினாலேயே அடையாளங்களும் அற்புதங்களும் நடந்தன என்பதை வசனப்பகுதி தொடர்ந்து வலியுறுத்துகின்றது. இன்னமும் அந்த வல்லமை வேறு யாருக்கும் தரப்படவில்லை. "அப்போஸ்தலர்களின் அதிகாரமானது … அவர்களின் கரங்களால் மட்டுமே நடந்த இந்த அற்புதங்களால் பெரிய அளவில் பலப்படுத்தப்பட்டது" என்று A.C. ஹெர்வி அவர்கள் சரியாகக் கூறியுள்ளார் (A.C. Hervey, *Pulpit Commentary*, vol. 18

[கிரான்ட் ரேப்பிட், மிச்.: Wm. B. Eerdmans Publishing Co., 1950], 158). [77]இது எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் பொதுவாய்க் கூடிய இடமாயிருக்க வேண்டும் என்பது உறுதி (அப். 3:11லும் காண்க). [78]முதல் பார்வையில் இவ்வசனங்கள் முரண்பாடுள்ளவை போலக் காணப்படுகின்றன. "மற்றவர்கள்" என்பது யாரைக் குறிக்கிறது என்பதில் விளக்கவுரையாளர்கள் ஒத்துப் போவதில்லை, ஆனால் வசனப்பகுதியின் கருத்து தெளிவாய்க் காணப்படுகிறது: அனனியா மற்றும் சப்பீராளுக்கு நிகழ்ந்தது சிலரைப் பயப்படுத்தியிருப்பினும், பொதுவாக சபைக்கும் அதன் நோக்கத்திற்கும் இது உதவியாய் இருந்தது. [79]பெண்கள் கிறிஸ்தவர்களாயினர் என்று முதன்முதல் இங்குதான் குறிப்பாய்ச் சொல்லப்படுகிறது - ஆயினும் ஏற்கனவே பல பெண்கள் இருந்தனர் என்று நாம் நம்புகிறோம் (ஐக்கிய விருந்துகளைப் பிறகு யார் தயாரித்திருப்பார்கள்?). ஏற்கனவே ஒரு பெண் உறுப்பினர் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம் (அது நல்ல எடுத்துக்காட்டாக இல்லாவிடினும்): சப்பீராள். [80]இது ஒரு தூண்டுதல் ஆகும், ஏனெனில் சபை உறுப்பினர் ஒவ்வொருவரின் தேவைகளும் சந்திக்கப்பட்டது; சபை தங்களில் உள்ளவர்களில் தேவைப்படுபவர்களைப் போஷிப்பதைக் காணும்பொழுது, சிலர் சபையில் சேரும்படித் தூண்டப் படுகின்றனர்.

[81]"சேருதல்" என்பதன் சொல்லுக்குச் சொல்லான விளக்கம் "இணைதல்" என்பதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் "கூட்டமான வண்டியில் தாவி ஏறிக் கொள்ளுதல்" என்ற சொற்றொடரானது இக்கருத்தை விளக்கும். "புகழ்மிக்க ஒரு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்" என்ற பொருள் தருவதற்கு உங்கள் பகுதியில் ஏதேனும் உருவகச் சொற்கள் இருக்கலாம். [82]"மற்றவர்கள்" என்பது சபையில் இருந்த மற்ற உறுப்பினர்களைக் குறிப்பதாகச் சிலர் எண்ணுகின்றனர், இவர்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து சற்று விலகியிருந்தனர் என்றும் எண்ணு கின்றனர். மற்றும் சிலர், "மற்றவர்கள்" என்பது சில காலம் சபையைவிட்டுத் தனியாக விலகிச் சென்ற கிறிஸ்துவின் எதிரிகளைக் குறிக்கிறது என்று எண்ணுகின்றனர். ஆயினும் கொடுக்கப்பட்ட விளக்கத்தையே நான் தெரிவு செய்கிறேன். "சேர" என்ற வினைச் சொல்லானது "இணைந்து கொள்ள" என்றே பொருள்படுகிறது (KJVயிலும் இது சுட்டிக்காட்டப்படுறது). சபை என்பது "சேர்ந்து" கொள்வது என்ற எண்ணமுடையவர்களுக்கும், சபை என்பது "சேர்க்கப்படும்" இடமாகும் (வ. 14) என்ற எண்ணமுடைய வர்களுக்கும் இடையில் ஒரு முரண்பாடு நிலவுகிறது என்று நான் நம்புகிறேன். (நடபடிகள் 2:47ன் குறிப்புகளைக் காணவும்.) [83]"அனனியாவும் சப்பீராளும் உண்மையிலேயே கிறிஸ்தவர்களாயிருந்தார்களா?" மற்றும் "அவர்கள் இழந்துபோகப்பட்டார்களா அல்லது இரட்சிக்கப்பட்டார் களா?" என்பதுபற்றி விளக்கவுரையாளர்கள் இடர்ப்பாடு அடைகின்றனர். அனனியாவும் சப்பீராளும் கிறிஸ்தவர்கள் அல்ல, சபையின் உறுப்பினர்கள் அல்ல என்று எண்ணுவதற்குக் காரணம் எதுவும் இல்லையென்றே நான் நம்புகிறேன். சபை ஒழுங்குமுறை என்பது சபையின் உறுப்பினர் களுக்குத்தானே தவிர உறுப்பினரல்லாதவர்களுக்கல்ல (1 கொரி. 5:9-11). மேலும், அவர்கள் மனந்திரும்பியதற்கான சான்று எதுவும் நாம் காண வில்லை, எனவே மறு வாழ்க்கையில் அவர்களுக்கிடமுண்டு என்பதற்கான

ஆதாரம் எதுவும் வசனத்தில் காணப்படவில்லை. ஆயினும், இந்நிகழ்ச்சியில் இது முக்கியக் கருத்தல்ல, அநேக சமயங்களில் போல, இதிலும் நாம் “தேவனே நியாயாதிபதியாக உள்ளார்” என்று கூறலாம்.